வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=
# ஈழநாடு
Eelanadu
Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 21.01.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 21 பக்கங்கள் : 12




# ஊழல் வழக்குகளை விசாரிக்க சிறப்பு நீதிமன்றங்கள் தேவை!

## அரசிடம் மனோ எம்.பி கோரிக்கை

கொழும்பு, ஜனவரி 21

**நாட்டில் ஊழல் தொடர்பான வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்களை நிறுவுவதை ஜனாதிபதி பரிசீலிக்க வேண்டும் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் மனோ கணேசன் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் ஊழலுக்கு எதிரான முயற்சிகளை வரவேற்கின்றேன்.

பொலிஸ், இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, சட்டமா அதிபர் மற்றும் நீதித்துறை ஆகியவை குடியரசு ஜனநாயக நாட்டில் மக்கள் நம்பிக்கை வைக்கும் நிறுவனங்களாகும்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கோப்புகளை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மீண்டும் திறந்து, இம்மாத

11



## இந்தியாவிலிருந்து வந்துள்ள விக்கிரகத்துக்கு மஹாயாகம்

### கதிர்காமத்தில் பிரதிஷ்டை செய்யப்படும்

யாழ்ப்பாணம், ஜன. 21

இந்தியாவிலிருந்து கதிர்காமத்தில் பிரதிஷ்டை செய்வதற்காக எடுத்து வரப்பட்ட சுப்ரமணியன் சமேத கயாவல்லி மகாவல்லிக்கு நேற்று திங்கட்கிழமை மாவிட்டபுரம் கந்தன் ஆலயத்தில் விசேட மஹாயாகம் இடம்பெற்றது.

இந்தியா திருச்செந்தூரிலிருந்து இருந்து எடுத்துவரப்பட்ட சுப்ரமணியன் சமேத வள்ளி தெய்வானைக்கு பழனியில் விசேட மஹா யாகம் இடம்பெற்று, கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக

11

## உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து மகிந்த வெளியேறுவதற்குத் தயார்!

### நாமல் ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு, ஜன. 21

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தியோக பூர்வ இல்லத்திலிருந்து வெளியேற தயாராகவே உள்ளார் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லம் தொடர்பாக ஜனாதிபதி நேற்று முன்தினம் கூறிய கருத்து குறித்து நேற்று பிற்பகல் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த

11

## மகிந்த திணறமாட்டார்!

கொழும்பு, ஜன. 21

மகிந்த ஒருபோதும் திணறமாட்டார் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஊடகப் பேச்சாளரான மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அத்துடன், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று வெளியிட்ட கருத்துகள் தொடர்பிலும் அவர் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளார்.

தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தவர்கள், மகிந்த ராஜபக்ஷவை நேசிப்பவர்கள். எனவே, போரை முடிவுக்கு கொண்டுவந்த மகிந்தவை பாதுகாப்பதற்கு அனைவரும் அணி திரளவேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். (அ)

## 108 கிலோ கஞ்சாவுடன் நால்வர் யாழில் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 21

குருநகர் பகுதியில் 108 கிலோ கேரள கஞ்சாவுடன் 4 பேர் நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர். குருநகரைச் சேர்ந்த இருவரும் பூநகரி மற்றும் மன்னாரை சேர்ந்தவர்களாக நால்வரும் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்களை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் ,

11

## எரிபொருள் வரியை குறைக்க முடியாது!

### ஜனாதிபதி அநுர திட்டவட்டம்



கொழும்பு, ஜன. 21

எரிபொருள் மீது விதிக்கப்பட்டுள்ள வரியைக் குறைக்க முடியாது என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

பேருவளைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு

11

## விசுவமடு மாவீரர் துயிலுமில்ல காணியை விடுவிக்கவேண்டும்

### வடக்கு ஆளுநரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 21

முல்லைத்தீவு விசுவமடு தேராவில் மாவீரர் துயிலுமில்ல காணிஂய விடுவிக்க கோரி, தேராவில் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுவினர் மற்றும் மாவீரர்களின் பெற்றோர் உரித்துடையோர் நேற்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை சந்தித்து கலந்துரையாடினர்.

தேராவில் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுவினர் துயிலும் இல்ல காணி விடுவிக்க கோரி, அண்மையில் கையெழுத்து சேகரிக்கும்

11

## ரணில் - சஜித் இணைவதற்கு ஐக்கிய தேசிய கட்சி அனுமதி

கொழும்பு, ஜன. 21

தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒன்றிணைவது குறித்து பேச்சுவார்த்தை நடத்த ஐக்கிய தேசியக் கட்சி ஒப்புக்கொண்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு, எதிர்வரும் தேர்தல்களில் இரு கட்சிகளும் இணைந்து செயல்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஐக்கிய மக்கள் சக்தியுடன் கலந்துரையாடல்களைத் தொடங்க ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த விடயம் குறித்து ஆலோசிக்க ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு நேற்று பிற்பகல் கட்சி தலைமையகத்தில் கூடியது.

11

## அரிசித் தட்டுப்பாடு மீண்டும் ஏற்படாது!

### ஜனாதிபதி அநுர உறுதி

கொழும்பு, ஜன. 21

எதிர்வரும் பெரும்போகத்துக்காக அரிசி இருப்புக்களை பராமரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதால் மீண்டும் அரிசி தட்டுப்பாடு ஏற்படாது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஹொரணை பகுதியில் நடைபெற்ற மக்கள்

11

## ராஜபக்ஷர்களின் படுதோல்விக்கு ஊழல், மோசடி ஆட்சியே காரணம்

### அமைச்சர் சுனில் குமார கமகே

கொழும்பு, ஜன. 21

ராஜபக்ஷக்களின் ஊழல், மோசடி ஆட்சியே அவர்களின் படுதோல்விக்குப் பிரதான காரணம் என்று இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த தேர்தல்களில் ராஜபக்ஷக்கள் வரலாறு காணாத வகையில் படுதோல்வியடைந்துள்ளனர். அவர்களை மக்கள் அடியோடு நிராகரித்து விட்டார்கள். ராஜபக்ஷக்களின் ஊழல், மோசடி ஆட்சியே அவர்களின் படுதோல்விக்குப் பிரதான காரணம்.

ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட ராஜபக்ஷக்கள் தேர்தல்களில் படுதோல்வியடைந்தாலும் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பவே முடியாது. அவர்கள் இழைத்த குற்றங்களுக்கு

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருடர்களை அரசு பாதுகாக்கின்றது!

## சமிந்த விஜேசிறி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 21

**ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலாக அரசாங்கமும் திருடர்களை பாதுகாப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மக்கள் தமக்கு எதிராக செயற்படுவர் என்ற அச்சம் இந்த அரசாங்கத்துக்கு உள்ளது. ஆகவே பொய்யுரைத்து நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ளவேண்டும்.

அதன் காரணமாக ராஜபக்ஷர்கள் மீது மீண்டும் குற்றம் சாட்டுவதற்காக மீண்டும் ஜனாதிபதி மேடைக்கு வந்துள்ளார். அவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் உள்ளன என்றால் அவற்றுக்கு உரிய சட்ட நடவடிக்கையை ஜனாதிபதியால் எடுக்க முடியும். அவர் எதிர்கட்சி அல்ல நாட்டின் ஜனாதிபதி என்பதை புரிந்து கொண்டு செயற்படவேண்டும்.

அத்துடன், ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களை அச்சுறுத்தி தமது இயலாமையை மறைக்க முடியுமா என பார்க்கின்றனர். மேலும் சீனத் திட்டங்களை விமர்சித்தவர்கள் தற்போது அவற்றை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

கடந்த காலங்களில் நிலம் வாங்கியதாகவும், பணம் வாங்கியதாகவும், உகாண்டாவில் பணம் இருப்பதாகவும் சொன்னார்கள். இப்போது அதைப் பற்றி பேசுவதில்லை. திருடர்களுடன் உறவு வைத்திருப்பதால் திருடர்கள் பாதுகாக்கப்படுகிறார்கள் - என்றார். (அ)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் மாபெரும் குருதிக்கொடை முகாம்!

யாழ்ப்பாணம், ஜன. 21

விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டத்தின் 42வது மாபெரும் இரத்ததான முகாம் நேற்று முன்தினம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நடத்தப்பட்டது.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையின் இரத்த வங்கியானது சிறப்புற நடைபெறவேண்டும் என்ற நோக்கத்தில் இந்த இரத்ததான முகாம் முன்னெடுக்கப்பட்டது.

இவ் இரத்ததானமுகாமில் 17 குருதிக்கொடையாளர்கள் கலந்துகொண்டு குருதி வழங்கினார்கள். (அ-05)



# மன்னார் ரயில் கடவை அருகில் இளம் பெண்ணின் சடலம் மீட்பு!



மன்னார், ஜன. 21

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோட்டக்காடு ரயில் கடவை யின் அருகில் இளம் பெண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை அடையாளம் காணப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 4.30 மணியளவில் தலைமன்னாரில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலில் குறித்த பெண் மோதி உயிரிழந்திருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் மன்னார் ஜீவபுரம் பகுதியில் வசித்து வந்துள்ள நிலையில் வெள்ளம் காரணமாக தற்காலிகமாக தோட்டக் காட்டில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்த நிலையில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த மரணம் தொடர்பாக மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ஊர்காவற்துறை பொலிஸாரின் ஏற்பாட்டில் கற்றல் உபகரணப் பொதி வழங்கல் நிகழ்வு!

யாழ்ப்பாணம், ஜன. 21

ஊர்காவற்துறை பொலிஸாரின் ஏற்பாட்டில் கொழும்பு லயன்ஸ் கழகத்தினால் வேலணைக் கல்விக் கோட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட தரம் 5 மாணவர்களுக்கு பெறுமதியான கற்றல் உபகரணப் பொதி வழங்கல் நிகழ்வு வேலணை மத்திய கல்லூரியில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது 100 மாணவர்களுக்குரிய புத்தகப்பை மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதேவேளை ஊர்காவற்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது.

நிகழ்வில் பிரதம அதிதியாக



வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் திலக் தனபால, ஊர்காவற்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# முன்னாள் அமைச்சர் விஜேமுனிக்கு பிணை!

கொழும்பு, ஜன. 21

சட்ட விரோதமான முறையில் ஒன்று சேர்க்கப்பட்ட வாகனமொன்றை தம் வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதான முன்னாள் அமைச்சர் விஜித் விஜேமுனி சொய்சா பிணை விடுவிக்கப்பட்டுள்ளார்.

நேற்று காலை பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் அவர் முன்னிலையாகியிருந்த நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

6 மணி நேரத்துக்கும் மேலாக வாக்குமூலம் அளித்த பின்னர் வலான ஊழல் தடுப்புப் பிரிவினரால் நேற்று முன் தினம் அவர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு டிசெம்பர் 5 ஆம் திகதி ஹப்புத்தளை முதுவானவத்தை பகுதியில் இந்த வாகனம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. (அ)

# திருவள்ளுவர் கலாசார மையத்தில் 3ஆம் இடத்துக்கு சென்ற தமிழ்மொழி

## அதிர்ச்சியடைந்தாராம் அமைச்சர் சந்திரசேகர்

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ்ப்பாணத்தில் திருவள்ளுவர் கலாசார மையத்தின் பெயர்ப் பலகையில் தமிழ் மொழிக்கு மூன்றாவது இடம் கொடுக்கப்பட்டிருந்ததை பார்த்து அதிர்ச்சியுற்றதாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் - பலாலி வீதி, கந்தர்மடப்பகுதியில் தேசிய மக்கள் சக்தியின் மக்கள் தொடர்பாடல் காரியாலயத்தை திறந்து வைத்து உரை யாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்திய அரசின் நிதி பங்காளிப்புடன் திறந்து வைக்கப்பட்ட யாழ்ப்பாணம் கலாசார மையம் திருவள்ளுவர் கலாசார மையம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.



குறித்த நிகழ்வில் நானும் அதிதியாக கலந்து கொண்டவன் என்ற வகையில் பெயர் மாற்றம் தொடர்பில் திரை நீக்கத்தின்போது தான் அவதானித்தேன்.

திருவள்ளுவர் கலாசார மையம் எனப் பெயர் மாற்றியது குற்றம் அல்ல. யாழ்ப்பாணத்திற்கே உரித்தான பெயர்களான யாழ். கலாசார மையம் அல்லது யாழ். பண்பாட்டு மையம் என்ற பெயர் சூட்டியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் என்பது எனது தனிப்பட்ட கருத்து.

பெயர் சூட்டும் நிகழ்வில் திருவள்ளுவர் கலாசார மையம் என காட்சிப்படுத்தப்பட்ட இலத்திரனியல் திரையில் தமிழுக்கு மூன்றாவது இடம் வழங்கப்பட்டமை கவலை தரும் விடயமாக இருந்தது. அதனைப் பார்த்து நான் அதிர்ச்சியடைந்தேன்.

தமிழ் மக்கள் வாழும் பகுதியில் தமிழுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். சில வேளை தெரியாமல் சில தவறுகள் இடம்பெற்று இருக்கக்கூடும்.

குறித்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுடன் நான் இன்னும் கலந்துரையாடவில்லை. நிச்சயமாக அது தொடர்பில் கலந்துரையாடி இனிவரும் காலங்களில் தவறுகள் இடம்பெறா வண்ணம் செயல்பாடுகளை முன்னெடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் - என்றார். (அ)

# நெல்லுக்கு நிர்ணய விலையை வழங்க முடியாத நிலையில் அரசு!

## தேசிய விவசாய கூட்டமைப்பு

கொழும்பு, ஜன. 21

கிழக்கு மாகாணத்தில் அறுவடை ஆரம்பமாகியுள்ள நிலையில் அரசாங்கத்தினால் நிர்ணய விலையை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தேசிய விவசாயக் கூட்டமைப்பின் தலைவர் அநுராத தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் அரிசி பற்றாக்குறை நிலவி வருவதால், அரசாங்கத்தினால் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை வழங்க இயலாமல் போயுள்ளது. ஒரு வாரத்துக்கு முன்னர், நாடு முழுவதிலும் உள்ள விவசாயத் தலைவர்களுடன் கலந்துரையாடி, ஒரு கிலோ கிராமுக்கான விலைக் குறிப்பை வகுத்தோம்.

விவசாயிகளுக்கு நிர்ணய விலைகளை வழங்கும் விடயத்தில் அரசாங்கம் தோல்வி கண்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் தற்போது நெல் அறுவடை நடைபெறுகிறது. இருப்பினும் அரசாங்கம் இன்னமும் கூட நிர்ணய விலையை வழங்க தயங்குகின்றது.

நாட்டு மக்கள் அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கியுள்ளனர். ஆனால் சர்வதேச நாணய நிதியத்தின் வரி நிர்ணயத்திற்கு அமைய விலையை நிர்ணயிப்பதற்காக மக்கள் அந்த ஆணையை வழங்கவில்லை- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
21.01.2025 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், தை 08

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ஜே.வி.பியின் பார்வையில் இனவாதம்

ஜே.வி.பி. அதிகாரத்தை கைப்பற்றிய நாளிலிருந்து, ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிகழ்வுகளில் பேசுகின்ற போது, அடிக்கடி ஒரு விடயத்தை பதிவு செய்ய முயற்சிக்கின்றனர் - அதாவது, எங்களுடைய ஆட்சியில் இனவாதத்துக்கு இடமில்லை - அதனை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்.

தேசிய மக்கள் சக்தி, வடக்கு மாகாணத்தில் வெற்றி பெற்றமை பற்றி கருத்துக்கூறும் போது, ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவும் அப்படித்தான் பேசியிருந்தார் - அதாவது, வடக்கு மக்கள் இனவாதத்தை தோற்கடித்திருக்கின்றனர். தேசிய மக்கள் சக்திக்கு தமிழ் மக்கள் வாக்களித்திருப்பதை அவ்வாறுதான் ஜே.வி.பி. - தேசிய மக்கள் சக்தி, புரிந்து கொள்கின்றது என்றால், இந்த இடத்தில் கேட்க வேண்டிய கேள்வி - ஜே.வி.பியின் பார்வையில் இனவாதம் என்பதால் விளங்கிக்கொள்ளப்படுவது என்ன?

ஜனாதிபதியும் தேசிய மக்கள் சக்தியின் 159 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இலங்கையின் அரசியல் யாப்பின் மீது, சத்தியப்பிரமாணம் செய்தே தங்களின் பொறுப்புக்களை ஏற்றிருக்கின்றனர். கடந்த காலத்தில் அரசியல் யாப்பிற்கு உண்மையாக இருப்பதாக சத்தியம் செய்தவர்கள் எவருமே அவ்வாறு நடந்துகொள்ளவில்லை - இப்போது கேள்வி அநுரகுமாரவும் அவரது விசுவாச நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் யாப்பிற்கு உண்மையாக இருப்பார்களா? அப்படியானால் முதலில் அரசியலமைப்பிலுள்ளவற்றை அமுல்படுத்த வேண்டுமல்லவா - அதற்காக பாடுபடவேண்டும் அல்லவா.

தேசிய மக்கள் சக்தி, அரசாங்கத்தை பொறுப்பேற்ற நாளிலிருந்து இன்றுவரையில் அரசியலமைப்பிலுள்ளவற்றை அமுல்படுத்துவது பற்றி வாய்திறக்கவில்லை - உங்களுடைய ஆட்சியில் இனவாதத்துக்கு இடமில்லை என்றால், அதனை நீங்கள் செயலில் அல்லவா காண்பிக்க வேண்டும்.

ஏனைய அனைத்து ஆட்சியாளர்களும் இனவாத அடிப்படையில்தான் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதை தவிர்த்து வந்தனர் - ஒன்றில் இனவாத அடிப்படையில் சிந்தித்ததனர் - அல்லது, இனவாதிக்ளை கண்டு அஞ்சினர். இரண்டில் ஒன்றின் காரணமாகவே அவர்களில் எவருமே, அரசியலமைப்பை முழுமையாக அமுல்படுத்த முயற்சிக்கவில்லை.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், ஜே.வி.பி அரசாங்கம் இனவாதமற்றது என்பது உண்மையானால், அதனை முதலில் செயலில் காண்பிக்க வேண்டும். அதன் முதல் படியாக, மாகாண சபைத் தேர்தலை நடத்தி, அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும். அவ்வாறு செய்துவிட்டு அதன் பின்னர் எங்களுடைய அரசாங்கத்தில் இனவாதத்துக்கு இடமில்லை என்று கூறினால் அதில் பொருளுண்டு.

சிங்கள இனவாதம் என்பதை வெறுமனே தமிழர் வெறுப்பை முன்வைத்து பேசுவதாக குறுக்கி நோக்கக் கூடாது. இனவாதம் என்பது அடிப்படையில் ஓர் அரசியல் இயங்குநிலையாகும். அந்த அரசியல் இயங்குநிலைதான் தமிழ் மக்களுக்கு சொற்ப அதிகாரங்களையும் கொடுத்துவிடக்கூடாது என்னும் எண்ணத்தை ஆட்சியின் ஒரு பகுதியாக்கிக் கொள்கின்றது. இதன் விளைவாகவே, வடக்கு - கிழக்கில் மாகாண சபை முறையாக இயங்க முடியாமல் இருக்கின்றது. 13ஆவது திருத்தத்தை தடுக்க நினைப்பவர்கள் எவ்வாறு அதற்கு அப்பால் தர முயற்சிப்பார்கள்? இவற்றை கருத்தில் கொண்டு தங்களின் நம்பகத்தை நன்மையை முதலில் ஜே.வி.பி நிரூபிக்க வேண்டும்.

# வேலையற்ற பட்டதாரிகள் யாழில் மீண்டும் போராட்டம்

### ஆளுநர் செயலக வளாகத்தில் பொலிஸார் குவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.21

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வழங்குமாறு கோரியே இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில், வடக்கு மாகாணத்தை சேர்ந்த ஏராளமான பட்டதாரிகள் கலந்து கொண்டனர்.



யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக உள்ள உலகத் தமிழாராய்சி மாநாட்டு படுகொலை நினைவுத் தூபிக்கு முன்பாக நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டமாக ஆரம்பமாகிய தொடர்ந்து யாழ். மத்திய பேருந்து நிலைய வீதியூடாக பேரணியாக வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தை சென்றடைந்தனர்.

அங்கு பல்வேறு கோசங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால், வடக்கு மாகாண ஆளுநர் செயலக வளாகத்தில் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

(எ)

## திருவள்ளுவர் மகா சபையின் பவளவிழா யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,ஜன.21

அகில இலங்கை திருவள்ளுவர் மகா சபையின் 75 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு எதிர்வரும் 26 ஆம் திகதி பவளவிழா மாநாடும் புத்தக வெளியீடும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக குறித்த நிகழ்வின் ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

இது குறித்து யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் ஏற்பாட்டுக் குழுவினர் மேலும் கூறுகையில்,

1949 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட அகில இலங்கை திருவள்ளுவர் மகா சபையானது பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொண்டு பல சமூக பணிகளை குறிப்பாக வறிய மாணவர்களின் கல்வி செயல்பாடுகளை ஊக்குவித்து வந்துள்ளது. இதனால் பலன் பெற்ற பல நூறு பேர் உள்ளனர் என்று குறிப்பிட்டனர்.

இதேவேளை,

யாழ்ப்பாணத்தின் கலாசாரங்களை பிரதிபலிக்கும் வகையில் இந்திய அரசின் நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாணம் மத்திய கலாச ஆர நிலையம் திருவள்ளுவர் கலாசார நிலையமாக மாற்றப்பட்டுள்ள நிலையில் இந்தியாவின் குடியரசு தினமான 26 ஆம் திகதி குறித்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

(எ- 05)

# திருமலை. சம்பூர் பெரிய குளத்தை பார்வையிட்டார் ஜப்பான் தூதுவர்

திருகோணமலை,ஜன.21

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் இஸொமாடா அகியோ நேற்றையதினம் காலை சம்பூர் பகுதிக்கு சென்றார்.

இதன்போது ஜப்பான் அரசாங்கத்தின் நிதி உதவியுடன் 2022 ஆம் ஆண்டு புனரமைப்புச் செய்யப்பட்டு விவசாயிகளிடம் கையளிக்கப்பட்ட சம்பூர் பெரிய குளத்தை பார்வையிட்டார். இக்குளமான 9. 4 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டிருந்தது.


அத்தோடு சம்பூரிலுள்ள ஏனைய இரண்டு குளங்களை புனரமைப்பு செய்வதற்காக சம்பூர் கமநல சேவை திணைக்களத்தின் உத்தி



யோகத்தர்களால் ஜப்பான் தூதுவரிடம் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டிருந்தது.

(எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனவரி - 21 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம் - தை 08
நல்ல நேரம்: 7.31 -9.00
ராகு காலம்:3.00 -4.00
திதி :அட்டமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். சில வேலைகளை விட்டுக்கொடுத்து முடிப்பீர்கள்.

**இடபம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. புதியவர்கள் நண்பர்களாவார்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மிதுனம்**
எதிர்ப்புகள் அடங்கும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். பழைய கடன்குறித்து அவ்வப்போது யோசிப்பீர்கள். வீட்டிற்கு தேவையான பொருட்கள் வாங்குவீர்கள்.

**கடகம்**
துணிச்சலான முடிவுகள் எடுப்பீர்கள். உடன் பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். சொத்துபிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். வாகனத்தை சீர் செய்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

**சிம்மம்**
விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள். குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுப்பார்க்க வேண்டி வரும். உத்தியோகத்தில் மறதியால் பிரச்னை வரக்கூடும்.

**துலாம்**
சாலைகளை கவனமாக கடந்து செல்லுங்கள். அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். லேசாக தலை வலிக்கும். குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து போகும்.

**விருட்சிகம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். பழைய பிரச்னைகளைத் தீர்ப்பீர்கள். வீட்டை அழகுப்படுத்துவீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள்.


**தனுசு**
கடந்த கால சுகமான அனுபவங்களை சாதனைகளை அவ்வப்போது நினைத்து மகிழ்வீர்கள். உடன்பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள்.

**மகரம்**
உணர்ச்சி பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள் செயல்படுவீர்கள். திடீர்முடிவுகள் எடுப்பீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். புதிய பாதை தெரியும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் தொடங்கியிருப்பதால் வேலைச் சுமையால் உடல் அசதி, சோர்வு வந்து நீங்கும். பணப்பற்றாக்குறையால் பிறரிடம் கைமாற்றாக வாங்க வேண்டி வரும்.

**மீனம்**
கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். குடும்ப விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள். மனைவி வழியில் ஆதரவு பெருகும். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள்.

# காங்கேசன்துறை தையிட்டி கணையவிற் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம்



யாழ்ப்பாணம்,ஜன.21

காங்கேசன்துறை தையிட்டி கணையவிற் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

17ஆம் திகதி கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகிய நிலையில் 18ஆம் திகதி எண்ணெய்க்காப்பு சாத்துதல் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் காலை முதல் நடைபெற்ற பூர்வாங்க கிரியைகளைத் தொடர்ந்து காலை 09.00 மணி முதல் 11. 37 வரையான சுபநேரத்தில் குடமுழுக்கு நடைபெற்றது.

நீண்ட காலத்தின் பின்னர் இடம்பெற்ற குடமுழுக்கில் பெருமளவான பக்தர்கள் கலந்து கொண்டனர். (எ-05)

# யாழில் நாடகமும் அரங்கியலும் முழுநாள் பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,ஜன.21

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான முழுநாள் பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 08.00 மணி தொடக்கம் மாலை 05.00 மணி வரை இல 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் நாளை 23ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்பாக தமது பெயர் ,விவரங்களை யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள். மேலதிக விவரங்களுக்கு 021 222 2393, 0776692657, 077 6393 620ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது. (எ)

# புத்தூர் முருகன் ஆலயத்தில் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஜன.21

யாழ்ப்பாணம் புத்தூர் மேற்குக் கலைமதி அருள்மிகு ஆலடி முருகன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு சிறப்புச்சொற்பொழிவு

ஆலயப் பிரதான மண்டபத்தில் இன்று செவ்வாய்க் கிழமை தொடக்கம் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை வரை தினமும் மாலை 06.00 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது. இன்று "விநாயகர் வழிபாட்டின் சிறப்புக்கள்" எனும் தலைப்பில் சைவப்புலவர் செ. த. குமரனும், நாளை "முருகப் பெருமானும் அருணகிரிநாதரும்" எனும் தலைப்பில் இளஞ்சைவப்புலவர் க. கயிலைவாசனும் நாளை மறுதினம் விடயம் "மஹோற்சவம் உணர்த்தும் ஐந்தொழித் தத்துவம்" எனும் தலைப்பில் இளஞ் சைவப்புலவர் ச. நவநீதனும் சொற்பொழிவாற்றவுள்ளனர். (எ)

# கலாசார மைய பெயர் மாற்றம் குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்

## முன்னாள் அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம்,ஜன.21

யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டுள்ள கலாசார மையத்தின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது என முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார் .ஈழத் தமிழர்களின் கலாசார பாரம்பரியங்களை பேணிப் பாதுகாத்து வளர்ப்பதனை நோக்கமாக கொண்டு இந்திய அரசினால் வழங்கப்பட்ட இந்தக் கலாசார மையம் தமிழ் மக்களின் அடையாளமாக தற்போது காணப்படுகின்றது.

யாழ். மாநகர சபைக்குச் சொந்தமான காணியில் அதனை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் அனைத்தும் எம்மாலேயே முன்னெடுக்கப்பட்டிருந்ததன. இவ்வாறான பின்னணியிலேயே குறித்த பெயர் மாற்றம் செய்யப் பட்டுள்ளது

உலகப் பொதுமறையான திருக்குறளை எமக்களித்த திருவள்ளுவர் எமது மதிப்பிற்குரியவர். அவரையும் அவருடைய ஆளுமையையும் போற்றிப் புகழ்வதில் தமிழர்கள் யாருமே பின்நிற்கப் போவதில்லை. கடந்த காலங்களில் இந்திய அரசினால் வழங்கப்பட்ட திருவள்ளுவர் சிலைகளை எமது மக்கள் ஆர்வத்துடனும் பெருமிதத்துடன் பிதிஷ்டை செய்து பராமரித்து வருகின்றனர்.

எனினும் இலங்கையின் வடக்கு - கிழக்கு பகுதிகளில் வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்களின் அடையாளங்களுள் ஒன்றான "யாழ்ப்பாணம்" என்ற பெயர் நீக்கப்பட்டிருப்பதானது, தமிழ் மக்களின் அடையாளங்களை அழிக்க முனைகின்ற தீய சக்திகளின் மறைகரம் இந்தப் பெயர் மாற்றத்தின் பின்னணியில் இருக்குமோ என்ற நியாயமான சந்தேகத்தை எமது மக்களுக்கு ஏற்படுத்தி இருப்பதனை அவதானிக்க கூடியதாக இருக்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரயிலில் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் பிமல்

## பல குறைபாடுகளைக் கண்டறிந்தார்

கொழும்பு, ஜன.

**போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்னயாக நேற்றுக் காலை 7.13 மணிக்கு மொறட்டுவயிலிருந்து அலுவலக ரயிலில் கொழும்பு கோட்டை வரை திடீர் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார்.**

இதன்போது ரயில் பயணத்தில் காணப்பட்ட பல குறைபாடுகள் கண்டறியப்பட்டன. இந்த ரயில் பயணித்தின்போது பல பயணிகள் நின்றுகொண்டு பயணித்த நிலையில் அமைச்சர் அவர்களிடம் நட்பு ரீதியான கலந்துரையாடலையும் மேற்கொண்டார்.

அமைச்சர் பயணித்த ரயில் 13 நிமிடங்கள் காலதாமதமாக வருகை தந்துள்ளமை இதன்போது கண்டறியப்பட்டுள்ளது. அது மாத்திரமன்றி பல ரயில் நிலையங்களில் விரைவான கண்காணிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட நிலையில் பல குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

அத்துடன், ரயிலில் மின்விசிறிகள் இன்மையும் கண்காணிக்கப்பட்டது. அதேவேளை அங்கவீனமடைந்தவர்கள் ரயிலில் ஏறுவதற்கான எந்தவித வசதிகளும் இன்மையும் கண்டறியப்பட்டது. அதேபோன்று மலசல கூடங்கள் அசுத்தமாகவும் , ஆபத்தான ரயில் ஓடுபாதைகள் காணப்பட்டமையையும் அவதானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி!

கொழும்பு, ஜன. 21

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 292 ரூபாய் 29 சதம், விற்பனைப் பெறுமதி 300 ரூபாய் 81 சதம்.

ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 354 ரூபாய் 77 சதம், விற்பனைப் பெறுமதி 368 ரூபா 48 சதம்.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 298 ரூபாய் 92 சதம், விற்பனைப் பெறுமதி 311 ரூபாய் 37 சதம்.

சுவிஸ் பிராங் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 316 ரூபாய் 95 சதம், விற்பனைப் பெறுமதி 332 ரூபாய் 13 சதம்.

கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 200 ரூபா 86 சதம், விற்பனைப் பெறுமதி 209 ரூபாய் 45 சதம்.

அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 179 ரூபாய் 49 சதம், விற்பனைப் பெறுமதி 188 ரூபாய் 86 சதம்.

சிங்கப்பூர் டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 212 ரூபாய் 19 சதம், விற்பனைப் பெறுமதி 221 ரூபாய் 96 சதம்.

ஜப்பானிய யென் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 1 ரூபாய் 86 சதம், விற்பனைப் பெறுமதி 1 ரூபாய் 94 சதம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# மீன்பிடி வலையில் மனித எலும்புகள்!

கொழும்பு, ஜன. 21

களுத்துறை,மில்லனிய, ஹல்தொட்ட பிரதேசத்தில் உள்ள கால்வாய் ஒன்றில் மீன்பிடி வலையிலிருந்து மனித எலும்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கால்வாய்க்கு மீன்பிடிக்கச் சென்ற குழு ஒன்று ஓடைக் கரையிலுள்ள மூங்கில் புதருக்கு அருகில் மீன்பிடி வலையை வீசிய போது வலையிலிருந்து மனித எலும்புகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது மேலும் பல மனித எலும்புகள் கண்டெடுக்கப்பட்டதையடுத்து, இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர், ஹொரணை நீதவான் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டு மனித எலும்புகளை ஹொரண சட்ட வைத்திய அதிகாரியிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (அ)

# பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய நான்கு பேர் இன்ரர்போல் பொலிஸாரால் கைது!

கொழும்பு, ஜன. 21

நாட்டில் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டு காவல்துறையினரால் தேடப்பட்டு வந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுக்களை சேர்ந்த நான்கு பேரை இன்ரர்போல் எனப்படும் சர்வதேச பொலிஸ் கைது செய்துள்ளது. அவர்கள் டுபாய் உள்ளிட்ட 4 நாடுகளில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில், பாதுகாப்பு காரணங்களுக்காக அவர்களின் பெயர்களை வெளியிடாமல் இருக்க பாதுகாப்பு தரப்பினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நாட்டில் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டு வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்ற குற்றவாளிகளின் பெயர்ப் பட்டியலை சர்வதேச பொலிஸாரிடம் சமர்ப்பிக்க பாதுகாப்பு தரப்பினர் நடவடிக்கை எடுத்ததையடுத்து இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இதனிடையே, பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள போதைப் பொருள் வர்த்தகரும் திட்டமிடப்பட்ட குற்றக் குழுவின் உறுப்பினருமான ஜனித் மதுஷங்க அண்மையில் இந்தியாவின் மும்பையில் கைது செய்யப்பட்டார்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் ஒன்பதாம் திகதி பலபிட்டிய நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெற்ற விசாரணையைத் தொடர்ந்து அவர் கடுமையான பிணை நிபந்தனைகளின் கீழ் விடுவிக்கப்பட்டார்.

அவருக்கு வெளிநாட்டுப் பயணத் தடை விதித்த நீதவான், ஒவ்வொரு மாதமும் இறுதி ஞாயிற்றுக்கிழமை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாக வேண்டும் என உத்தரவிட்டுள்ளார். இந்த நிலையில் அவர் குறித்த உத்தரவைப் புறக்க ணித்து நாட்டை விட்டுத்தப் பியோடியுள்ளதுடன், அவர் கடல் மார்க்கமாக இந்தியா வுக்கு தப்பிச் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது. (அ)

# சதொசவில் தீப்பரவல்!

கொழும்பு, ஜன. 21

பண்டாரவளை , தர்ம விஜய மாவத்தையின் பழைய வணிக வளாகத்தில் அமைந்துள்ள சதொச வணிக மையத்தில் நேற்று அதிகாலை 4 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது.

தீ விபத்தினால் சதொச நிலையம் முற்றாக தீக்கிரையாகியுள்ளதாக பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது பண்டாரவளை பொலிஸார் மற்றும் நகர சபையினரும் இணைந்து தீயை கட்டுப்படுத்தியதுடன் , தீ ஏனைய கடைகளுக்கு பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விபத்தில் ஏற்பட்ட சேதம் இன்னும் கணக்கிடப்படவில்லை எனவும் ,தீ விபத்துக்கான காரணம் இன்னும் வெளியாகவில்லை எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை பண்டாரவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# இணையத்தளத்தில் விற்பனை செய்யப்பட்ட ரயில் பயணச் சீட்டு தொடர்பில் விசாரணை

கொழும்பு, ஜன. 21

ரயில் திணைக்களத்தினால் இணையத்தளத்தில் வழங்கப்பட்ட பயணச்சீட்டுக்களை அதிக விலைக்கு விற்பனை செய்த சம்பவம் குறித்து விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

ரயில் திணைக்களம் அளித்த முறைப்பாட்டை தொடர்ந்து இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி குறுகிய காலத்தில் இணையத்தளத்தில் பயணச்சீட்டுகளை பெற்று அதிக விலைக்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு நீதிமன்றத்தில் தெரிவித்தது.

மேலும் இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு நீதிமன்றத்திற்கு உண்மைகள் தெரிவிக்கப்படும் எனவும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# அரிசி விலையை குறைக்க முடியும்

கொழும்பு, ஜன. 21

எதிர்காலத்தில் நுகர்வோருக்கு குறைந்த விலையில் அரிசியை வழங்க முடியும் என சிறு மற்றும் நடுத்தர அளவிலான நெல் ஆலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அனுராதபுரத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று உரையாற்றிய அதன் தலைவர் யு.கே.சேமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இதற்கிடையில், இந்த ஆண்டு மகா பருவத்திற்கான நெல் அறுவடை தொடங்கியுள்ள நிலையில், அரசாங்கம் நெல்லுக்கான உத்தரவாத விலையை இன்னும் அறிவிக்காததால், தாம் பல பிரச்னைகளை எதிர்கொள்வதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

பெரும்போகத்தில் ஒரு கிலோ நெல்லுக்குக் குறைந்தபட்சம் 140 ரூபாய் உத்தரவாத விலை அறிவிக்கப்பட வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்துகின்றனர். (அ)

# 6 கோடி 63 இலட்சம் ரூபா பெறுமதி மிக்க போதைப்பொருளுடன் இரண்டு பேர் கைது

கொழும்பு, ஜன. 21

6 கோடியே 63 இலட்சம் ரூபா பெறுமதியான குஷ் போதைப்பொருளுடன் இரண்டு சந்தேக நபர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் அம்பாந்தோட்டை, கட்டுவன மற்றும் அம்பாறை, மகாஓயா ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் 28 மற்றும் 30 வயதுடையவர்கள் ஆவர்.

சந்தேக நபர்கள் இருவரும் தாய்லாந்தின் பாங்கொக் நகரத்தில் இருந்து நேற்றுக் காலை 10.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

பின்னர், சந்தேக நபர்கள் இருவரும் விமான நிலையத்தை விட்டு வெளியேற முயன்ற போது விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் சோதனைக்கு ட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன்போது,சந்தேக நபர்கள் கொண்டு வந்த பயணப் பொதிகளிலிருந்து 06 கிலோ கிராம் 630 கிராம் குஷ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத் தப்படவுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மக்கள் சக்தியின் அரசு விரைவில் கிளீன் செய்யப்படும்!

## கூறுகிறார் ரஞ்சித் மத்தும பண்டார

கொழும்பு, ஜன. 21

**ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தையும் விரைவில் கிளீன் செய்ய வேண்டிவரும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-ஊடக சுதந்திரம் இந்நாட்டுக்கு மிக அவசியம். நல்லாட்சியின்போது ஊடகங்கள் அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்தன. அப்போதுகூட நாம் ஊடக சுதந்திரத்தை பாதுகாத்தோம். ஆனால் தற்போதைய ஆட்சியின்கீழ் ஊடகங்கள் அச்சுறுத்தப்படுகின்றன. இதனை நாம் எதிர்க்கின்றோம்.

நாடாளுமன்றத்தில் இருந்து கூட்டுறவுச்சபைவரை எல்லாம் தற்போது கிளீன் செய்யப்பட்டு வருகின்றது.

பாராளுமன்றத்தில் சபாநாயகர் கிளீன் செய்யப்பட்டார். கூட்டுறவுத் தேர்தல்களில் ஆளுங்கட்சி தோல்வி அடைந்துவருகின்றது. ஏனெனில் குறுகிய காலப்பகுதிக்குள் இந்த அரசாங்கத்தைப் பற்றி மக்கள் புரிந்துகொண்டுள்ளனர்-என்றார். (அ)

# ரணிலின் தலைமையில் மாற்று பாராளுமன்றம்!

கொழும்பு, ஜன. 21

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலுடன் மாற்று பாராளுமன்றத்தையும், நிழல் அமைச்சரவையையும் ஸ்தாபிப்பதற்குரிய . ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

கடந்த பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த, தற்போதைய பாராளுமன்றத்தில் இடம்பெறாத அனைத்து கட்சிகளினதும் உறுப்பினர்களுக்கு, மாற்று பாராளுமன்றத்தில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்படவுள்ளது.

மாதமொன்றில் 8 நாள்கள் பாராளுமன்ற அமர்வு நடைபெறும். எனவே, குறித்த நாட்களில் மாற்று பாராளு மன்றத்தையும் கூட்டுவதற்கு திட்டமிடப் பட்டுள்ளது.

அதன்பின்னர் நிழல் அமைச்சரவையும் ஸ்தாபிக்கப்பட்டு, விடயதானங்களும் ஒதுக்கப்படவுள்ளன.

சபாநாயகர், சபை முதல்வர் மற்றும் கோப், கோபா குழு உள்ளிட்டவற்றுக்கும் மாற்று உறுப்பினர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

குறித்த மாற்று பாராளுமன்றத்துக்கு சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் ஜனாதிபதிகள் அழைக்கப்படவுள்ளனர் எனவும், கருத்துரைகளை ஆற்றுவதற்காக உலகத் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது. (அ)

# மழை நிலைமை தொடர சாத்தியம்!

கொழும்பு, ஜன. 21

வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் மழை நிலைமை மேலும் தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலும் சில இடங்களில் 150 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும்.

வட மாகாணத்தின் சில இடங்களிலும் மாத்தளை, நுவரெலியா, பொலனறுவை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும்.

ஏனைய இடங்களில் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுகளிலும் வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு (30-40) கிலோமீற்றர் வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும்.இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக் கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (அ)

# கதிர்காம கட்டடத்துக்கும் எனக்கும் தொடர்பு இல்லை

கொழும்பு, ஜன. 21

கதிர்காமத்தில் சட்டவிரோதமான முறையில் நிர்மாணிக்கப்பட்டு, ஜி.ராஜபக்ஷ என்ற பெயரில் மின்சாரக் கட்டணத்துடன் இணைக்கப்பட்ட கட்டடத்துக்கும் தனக்கும் தொடர்பு இல்லை என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கேள்விக்குள்ளாகியுள்ள குறித்த கட்டடம் கதிர்காமம் மாணிக்கக் கங்கைக்கு அருகில் உள்ள முன்பதிவு காணியில் 12 அறைகளைக் கொண்ட கட்டடம் ஆகும்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் சம்பவம் பற்றி வினவிய போது, முன்னாள் ஜனாதிபதி குறித்த சொத்துக்களுடன் தமக்கு தொடர்பு இருப்பதாக தெரிவிக்கப்படுவதை மறுத்துள்ளார்.

அதேவேளை மின்சாரக் கட்டணம் தொடர்பில் தனக்குத் தெரியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரச நிலத்தில் சட்டவிரோதமாக கட்டடம் கட்டப்பட்டமை குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தினர்.

இந்த விசாரணை முதலில் நல்லாட்சி அரசாங்கத்தின் போது ஆரம்பிக்கப்பட்ட போதிலும், கோட்டாபய ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அது நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கோட்டாபய கடந்த17 ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டார். இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ இதற்கு முன்னர் ஜனவரி 03 ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டார். இரண்டு ராஜபக்ஷக்களும் சொத்துக்களுடனான தொடர்பை மறுத்துள்ளனர்.

குறித்த சொத்து 2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டதாகவும் இராணுவக் குழு ஒன்றின் உழைப்பினால் கட்டப்பட்டதாகவும் விசாரணைகள்மூலம் தெரியவந்துள்ளது.

யோஷித ராஜபக்ஷவின் பாதுகாப்புக்கு நியமிக்கப்பட்டுள்ள இலங்கை கடற்படையைச் சேர்ந்த ஒருவரே கட்டடத்தின் கட்டுமானப் பணிகளுக்குப் பின்னர் கட்டடத்தை ஆக்கிரமித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்ட இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு!

கொழும்பு, ஜன. 21

வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெலிகந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முத்துக்கள் எனும் பகுதியில் வைத்து இடம்பெற்றுள்ளது.

சேனபுர பகுதியில் திருமணம் முடித்துள்ள வாழைச்சேனை - பிறைந்துறைச்சேனை பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய றிஸ்வான் எனும் நபரே இவ்வாறு மரணமடைந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

தனது மனைவி மற்றும் உறவினர் ஒருவருடன் அந்த நபர் செல்லும்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கரப்பொல-முத்துக்கல் வழியாக சேனபுர பகுதிக்குச் செல்லும் போது மூவரும் வெள்ளநீரில் அகப்பட்டுள்ளனர்.

அதில், இளம் குடும்பஸ்தர் நீரில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் சடலயாக மீட்கப் பட்டுள்ளதுடன், அவரது மனைவி மற்றும் மற்றைய நபர் மரக்கிளை ஒன்றினைப் பிடித்து உயிர் தப்பியுள்ளனர்.

மரணமடைந்த நபரின் உடல் மருத்துவப் பரிசோதனைக்காக வெலிகந்தை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சி.ஐ.டிக்கு வாக்குமூலம் அளிப்பதற்கு நான் தயார்

கொழும்பு, ஜன. 21

தென் கொரிய வேலை வாய்ப்பு சம்பவம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார இன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகி வாக்குமூலம் அளிக்க உள்ளதாக அவரது சட்டத்தரணி நேற்று கொழும்பு நீதவான் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக தாம் கைது செய்யப்படுவதற்கு முன்னர் முன் பிணையில் விடுவிக்கக் கோரி மனுஷ நாணயக்கார தாக்கல் செய்த முன்பிணை மனு நேற்று அழைக்கப்பட்டபோது, அவர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் நீதிமன்றத்துக்கு இதனைத் தெரிவித்தார்.தனது கட்சிக்காரர் இன்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு சென்று வாக்குமூலம் அளிப்பதற்கு தயாராகவுள்ளதா கவும், பின்னர் வேறொரு நாளில் இந்த மனுவின் சமர்ப் பணங்களை உறுதிப்படுத்து வதற்காக அழைக்குமாறும் ஜனாதிபதி சட்டத்தரணி நீதி மன்றத்திடம் இதன் போது கோரிக்கை விடுத்துள்ளார்.

# வழமைக்கு திரும்பிய ரயில் போக்குவரத்து

கொழும்பு, ஜன. 21

ரயில் போக்குவரத்து வழமைக்கு திரும்பியுள்ளது.

அனைத்து அலுவலக ரயில் சேவைகளும் வழமைபோன்று முன்னெடுக்கப்படுவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

ரயில் சாரதிகள் பலர் வினைத்திறன் பரீட்சையில் தோற்றியமையினால் கடந்த 3 நாட்களாக ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தன.இந்த 3 நாட்களிலும் பிரதான ரயில் போக்குவரத்தை வழமை போன்று முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் குறுந்தூர ரயில் சேவைகள் வெகுவாக பாதிக் கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (அ)

# குறைந்த வருமானம் கொண்ட குடும்ப கணக்கெடுப்பு இன்று

கொழும்பு, ஜன. 21

அஸ்வெசும திட்டத்தின் இரண்டாம் கட்டத்துக்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்த குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பு இன்று ஆரம்பிக்கப்படும் என நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

இரண்டாம் கட்டத்திற்காக நலன்புரி நன்மைகள் சபை கிட்டத்தட்ட 800,000 விண்ணப்பங்களைப் பெற்றுள்ளது.

விண் ப்பங்களில் இருந்து நலத் திட்ட உதவிகளைப் பெற தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்கில், வீடு வீடாகச் சென்று இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத் தப்படும் என்று குறிப்பிடப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஸ்வெசும இரண்டாம் கட்ட விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பு

கொழும்பு, ஜன. 21

அஸ்வெசும இரண்டாம் கட்டத்திற்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்த குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பு இன்று தொடங்கும் என நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

இரண்டாம் கட்டத்துக்காக நலன்புரி நன்மைகள் சபை சுமார் 8 இலட்சம் விண்ணப்பங்களைப் பெற்றுள்ளது.

அதற்கமைய, குறித்த விண்ணப்பங்களில் இருந்து நலத்திட்ட உதவிகளைப் பெற தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்கில், வீடு வீடாகச் சென்று இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அஸ்வெசும திட்டத்தின் முதல் கட்டத்திற்காக நலன்புரி நன்மைகள் சபை 3.4 மில்லியன் விண்ணப்பங்களைப் பெற்றது.

அதில் சுமார் 1.8 மில்லியன் பேர் அஸ்வெசும நலன்புரி நன்மைகளைப் பெற தகுதியானவர்களாக தெரிவாகி னர்.இருப்பினும், நலன்புரி நன்மைகள் சபை தற்போது 1.72 மில்லியன் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள் ளது. (அ)

# சீரற்ற வானிலையால் 17ஆயிரம் பேர் பாதிப்பு!

கொழும்பு, ஜன. 21

**திடீர் வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்களினால் நாட்டின் 11 மாவட்டங்களில் 5,738 குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் 16,930 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.**

இதனால், ஒருவர் உயிரிழந்துடன், மூன்று பேர் காயமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்றுக் காலை வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

71 குடும்பங்களைச் சேர்ந்த 239 பேர் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மொத்தம் 98 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன், ஒரு வீடு முற்றாக சேதமடைந்துள்ளது.

இதேவேளை, வடக்கு, கிழக்கு, வடமத்திய, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் இன்று இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (அ)

## பிரிட்டிஷ் பெண்ணின் பண அட்டையை திருடியவர் ஹற்றன் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஜன. 21

பிரிட்டிஷ் பெண்ணொருவரின் பண அட்டையைக் திருடி ஹற்றன் நகரிலுள்ள சில வர்த்தக நிலையங்களில் இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை கொள்வனவு செய்துள்ள சந்தேக நபர் ஹற்றன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

புத்தளம் பகுதியைச் சேர்ந்த 22 வயது நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டியிலிருந்து எல்ல நோக்கி சென்ற ரயிலில் பயணித்த பிரிட்டிஷ் பெண்ணின் பண அட்டையை, ஹற்றன் மற்றும் தலவாக்கலை ரயில் நிலையங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் வைத்தே இவர் திருடியுள்ளார்.

பின்னர் ஹற்றன் நகருக்கு வந்துள்ளார். ஹற்றன் நகரில் தங்க நகை, தொலைபேசி, ஆடை உள்ளிட்டவற்றை கொள்வனவு செய்துள்ளார்.

தங்கை நகையை ஹற்றனிலுள்ள தனியார் அடகு பிடிக்கும் நிலையமொன்றில் அடகு வைத்து 78 ஆயிரம் ரூபா பெற்றுள்ளார்.

தனது பண அட்டை களவாடப்பட்டுள்ளமை தொடர்பில் எல்ல சுற்றுலாப் பொலிஸாரிடம் குறித்த பெண் முறையிட்டுள்ளார். இதனையடுத்து அது தொடர்பில் ஹற்றன் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து விசாரணை வேட்டையில் இறங்கிய ஹற்றன் பொலிஸார், வாடகை வாகனமொன்றில் எல்ல நோக்கி பயணமாக தயாராகிக்கொண்டிருந்த சந்தேக நபரை கைது செய்துள்ளனர். களவாடிய பண அட்டையில் இருந்து வாங்கிய பொருட்களையும் மீட்டனர்.

பிரிட்டிஷ் பெண்ணை ஹற்றன் வரவழைத்து, பண அட்டையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தனர். குறித்த நபர் கடைகளில் வாங்கிய பொருட்கள் மீள வழங்கப்பட்டு அதற்குரிய பணமும் பெற்றுக்கொடுக்கப்பட்டது. (அ)

## சட்டமா அதிபர் திணைக்களத்தில் பெருமளவு பதவி வெற்றிடங்கள்!

கொழும்பு, ஜன. 21

சட்டமா அதிபர் திணைக்களத்தில் பெருமளவான பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல்நிலை, இடைநிலை மற்றும் கடைநிலை என்ற பகுதிகளுக்குள்ளான வெற்றிடங்கள் அடங்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பணியாளர் பற்றாக்குறையால் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்வது சவாலாக உள்ளது என்று பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை ஒன்று கூறுகிறது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் 2023 செயல்திறன் அறிக்கையில், 2023 டிசெம்பர் 31ஆம் திகதி நிலவரப்படி, திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் பட்டியல் 1,295 ஆகும்.

எனினும் அந்த பதவிகளில் 671 மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன. இதனால் 624 வெற்றிடங்கள் உள்ளன.

இது திணைக்களத்தின் பணியாளர்களில் 48வீதமாகும் இந்நிலையில், குறித்த பணியாளர் வெற்றிடங்கள், திணைக்களத்தின் செயல்திறனை நேரடியாகப் பாதித்துள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

## காஸாவில் போர்நிறுத்தம் இலங்கை அரசு வரவேற்பு

கொழும்பு, ஜன. 21

இஸ்ரேலுக்கும் ஹமாஸ/க்கும் இடையில் 15 மாதங்களாக நீடித்து வந்த மோதலுக்கு முற்றுப்புள்ளி வைத்த காஸாவில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தை இலங்கை வரவேற்றுள்ளது.

இது குறித்து ஒரு அறிக்கையில் வெளிவிகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு கூறியுள்ளதாவது-பணயக்கைதிகள் மற்றும் கைதிகளை பரிமாறிக்கொள்வதற்கும், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களை காஸாவில் அவர்கள் வசிக்கும் இடங்களுக்குத் திரும்புவதற்கும், காஸா மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கும் வழி வகுக்கும் போர்நிறுத்த ஒப்பந்தம் நிலைத்திருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இந்த முன்னேற்றங்கள் பலஸ்தீனம் மற்றும் பிராந்தியத்தில் நிலையான அமைதியை ஸ்தாபிப்பதற்கு பங்களிக்கும் என்பதில் நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம்-என்று தெரிவித்துள்ளது. (அ)

## சிமெந்து மூடைக்காக இலஞ்சம் பெற்ற பாடசாலை அதிபருக்கு விளக்கமறியல்!

கொழும்பு, ஜன. 21

முதலாம் தரத்துக்கு மாணவரை இணைத்துக் கொள்வதற்காக பத்து சிமெந்து மூடைகளுக்கான தொகையை இலஞ்சமாக பெற்ற சம்பவம் தொடர்பில் கைதான பாடசாலை ஆசிரியர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்ட பண்டாரவளை பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றின் அதிபர் நேற்று கொழும்பு, நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதன்போது, குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

குறித்த பாடசாலையில் மாணவர் ஒருவரை தரம் 1 இல் சேர்ப்பதற்காக, பத்து சிமெந்து மூடைகளுக்கான 18,520 ரூபா தொகையினை பாடசாலைக்கு முன்பாக அமைந்துள்ள வியாபாரியிடம் செலுத்துமாறு முறைப்பாட்டாளருக்கு கூறியுள்ளார்.

பணம் செலுத்தப்பட்ட நிலையில் அது தொடர்பாக அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் முன்னெடுத்த விசாரணைக்கு அமைய பாடசாலை அதிபர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

## இராணுவ முகாமிலிருந்து பாதாள குழுக்களின் கைகளுக்கு சென்ற 73 துப்பாக்கிகளில் 38 மீட்பு!

கொழும்பு, ஜன. 21

“இராணுவ முகாம்களிலுள்ள சில ஆயுதங்கள் பாதாள குழுக்கள் வசம் சென்றுள்ளன. பாதாள குழுக்களிடம் பணம் பெற்று துப்பாக்கிச்சூடு நடத்துபவர்களும் இராணுவத்துக்குள் இருக்கவே செய்கின்றனர். பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் துடைத்தெறியப்படும்.” என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

களுத்துறையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

பொலிஸ்மா அதிபர், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்கள் உட்பட பொலிஸாரின் தலையீட்டுடன் இலங்கை வரலாற்றில் அதிகளவான போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுவருகின்றன. பணம் மற்றும் ஆயுதங்கள் என்பனவும் மீட்கப்பட்டுவருகின்றன.

நாட்டிலுள்ள பயங்கரமானதொரு நிலை தொடர்பான தகவலொன்றை வெளியிடுகின்றேன். இராணுவ முகாம்களில் உள்ள ஆயுதங்கள் வெளியில் வந்துள்ளன. குறிப்பாக இராணுவ முகாமொன்றிலிருந்து 73 ரி 56 துப்பாக்கிகள் பாதாளக் குழுக்கள் வசம் சென்றுள்ளன. அவற்றில் 38 ஐ நாம் மீளப்பெற்றுள்வோம். எஞ்சிய 35 ஐ தேடிவருகின்றோம்.

இராணுவத்தில் சிறப்பாக செயல்படக்கூடிய, புகழ்பெற்ற அதிகாரிகள் இருக்கும் நிலையில், பாதாளக் குழுக்களுக்காக வேலை செய்யும் சிலரும் இருக்கவே செய்கின்றனர். பாதாளக் குழுவிடம் பணத்தை பெற்று விட்டு சூடு நடத்திவிட்டு முகாம்களுக்குள் செல்பவர்களும் இருக்கின்றனர். இப்பியான 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

## காலி கடலில் மூழ்கிய படகு!

கொழும்பு, ஜன. 21

காலி துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த படகு ஒன்று நீர் கசிவு காரணமாக கடலில் மூழ்கியுள்ளது.



குறித்த படகு வெளிநாட்டிலிருந்து கொண்டுவரப்பட்டு கடல் நடுவில் கைவிடப்பட்டுச் சென்றிருந்த நிலையில், பின்னர் காலி துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டது.

நீதிமன்ற உத்தரவுக்க அமைவாக நடத்தப்பட்ட பொது ஏலத்தில் ஒரு நிறுவனத்தால் இந்தப் படகு வாங்கப்பட்டது.

அது பழுதுபார்க்கப்பட்டு வந்த நிலையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.படகு மூழ்கும் போது அதில் குறிப்பிட்ட அளவு எரி பொருள் இருந்ததாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# நீதிமன்றத் தடை உத்தரவை மீறி திருவள்ளுவர் சிலை திரை நீக்கம்

கல்முனை,ஜன.21

**நீதிமன்றத் தடை உத்தரவு பெறப்பட்ட நிலையில் சர்ச்சைக்கு மத்தியில் திருவள்ளுவர் சிலை கொட்டும் அடை மழைக்கு மத்தியில் திரை நீக்கம் செய்யப்பட்டது.**






அம்பாறை, கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கிட்டங்கி வீதியில் அமைந்துள்ள கல்முனை தமிழர் கலாசார பேரவை வளாகத்தில் குறித்த சிலை பொலிஸாரின் பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை திறந்து வைக்கப் பட்டது.

சிலை திரை நீக்கம் செய்யும் நிகழ்வில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் மேலாளர் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மற்றும் வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே அதிசயராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும், கல்முனை தமிழர் கலாசார அபிவிருத்தி பேரவை உறுப்பினர்கள் உட்பட கல்முனை பிராந்திய இளைஞர் அமைப்புகள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண் டனர்.

அத்துடன் கல்முனை பகுதியில் நிறுவப்பட்ட திருவள்ளுவர் சிலை அனுமதியற்ற கட்டுமானம் என குறிப்பிட்டு ஏழு நாட்களுக்குள் அகற்ற மாநகர சபை உத்தரவு பிறப்பித்துள்ளது.


கல்முனை தமிழர் கலாசார அபிவிருத்தி பேரவையால் குறித்த பேரவை வளாகத்தில் திருவள்ளுவர் சிலை திறக்கப் படவுள்ளதாகவும் அந்த திறப்பு விழாவுக்கான அழைப்பிதழில் கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஏ.ரி.எம்.றாபி கௌரவ விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளதாகவும் அச்சிடப்பட்டிருந்த நிலையில் கல்முனை மாநகர சபையால் கல்முனை தமிழர் கலாசார அபிவிருத்திப் பேரவை செயலாளருக்கு முகவரியிட்டு "கல்முனை கல்லடிக் குளப் பிரதேசத்தில் அனுமதியற்ற கட்டுமானம்" என்ற தலைப்பில் கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது.

அத்தோடு, கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் விண்ணப்பத்துக்கு ஏற்ப கல்முனை நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் அஹமட்லெப்பை நாதீர், கல்முனை கல்லடி நில குளத்தில் கல்முனை மாநகர சபையின் அனுமதியின்றி சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலை திறப்பு விழா நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலிருந்து கல்முனை தமிழ் கலாசார பேரவை தலைவர், செயலாளர், உப தலைவர் ஆகியோருக்கு தடை உத்தரவு பிறப்பித்திருந்தார்.

மேலும் குறித்த சட்டவிரோத கட்டுமான நடவடிக்கையால் பல்லின இனங்கள் வாழும் இப்பிரதேசத்தில் இன முறுகல் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளதாகவும் குறித்த திறப்பு விழாவை உடனடியாக தடை செய்து கட்டளை வழங்குமாறு விண்ணப்பம் செய்துள்ளபடியால் மேற்குறித்த விடயங்களைக் கருத்தில் கொண்டு குறித்த திறப்புவிழா நடவடிக்கைகளை இன்றிலிருந்து 14 நாட்களுக்கு தடைசெய்கின்ற விதமாக தடையுத்தரவு பிறப்பிக்கப்படுகின்றது என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(எ)

## இறந்து கரையொதுங்கிய ஆமைகள்



மருதமுனை,ஜன.21

அம்பாறை, மருதமுனை - பாண்டிருப்பு இடைப்பட்ட பகுதிகளில் இரண்டு பெரிய கடல் ஆமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கின.

கடற்கரைக்கு சென்ற கடற்றொழிலாளர்கள் நேற்றுக் காலை உயிரிழந்த நிலையில் ஆமைகள் கரை ஒதுங்கியதை அவதானித்தனர்.

இவ்வாறு கரையொதுங்கிய இரண்டு கடலாமைகளும் சுமார் 3 அடி நீளமும் 25 தொடக்கம் 50 கிலோ கிராம் நிறை கொண்டதாகும் என எனவும் ஆழ் கடலில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக கடலாமைகள் கரையொதுங்கி வருவதாக அப்பகுதி கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.(எ)

## அஞ்சல் உத்தியோகத்தர் சங்க 18ஆவது வருடாந்த மாநாடும்



கல்முனை,ஜன.21

அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கத்தின் 18ஆவது வருடாந்த மாநாடும் பொதுக் கூட்டமும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாளிகைக்காடு வாவா றோயலி வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில், பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண பிரதி அஞ்சல் மா அதிபதி எச். எம். ஏ. ஜி. திலகரட்ன கலந்து கொண்டதுடன் கௌரவ விருந்தினராக மட்டக்களப்பு பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ். ஜெகன், மட்டக்களப்பு அஞ்சல் பயிற்சி நிறுவக பிரதம போதனாசிரியர் பி. நரேந்திரனும் கலந்து கொண்டனர்.(எ)

## கிராமத்துக்குள் நுழைந்த முதலை



திருகோணமலை, ஜன.21

மூதூர் - ஷாபிநகர் கிராமத்துக்குள் சுமார் 7 அடி நீளமான முதலையொன்று நுழைந்தது. இது பிரதேச மக்களால் பிடிக்கப்பட்டு ஷாபிநகர் வேதத்தீவு ஆற்றில் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளது.

மூதூர் ஷாபிநகர் கிராமத்துக்குள் முதலை ஒன்று நுழைந்தது. இதனை அவதானித்த இளைஞர்கள் முதலையை பிடித்தனர்.

இந்த நிலையில் குறித்த முதலையை வேதத்தீவு ஆற்றில் விடுவித்தனர். (எ)

## நடமாடும் சேவை ஒத்திவைப்பு

காரைதீவு,ஜன.21

மனித அபிவிருத்தி தாபனமும் காரைதீவு பிரதேச செயலகமும் இணைந்து இன்று 21 ஆம் திகதி நடத்தவிருந்த நடமாடும் சேவை சமகால கன மழை வெள்ளத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என உதவி இணைப்பாளர் எம். ஐ. றியாழ் தெரிவித்தார்.

இந்த நட மாடும் சேவை எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறும் என் றும் அவர் தெரிவித்தார். (எ)


## கல்லூரியில் கிளீன் சிறீலங்கா ஆரம்பமானது

கல்முனை, ஜன.21

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் "கிளீன் சிறீ லங்கா" வேலைத்திட்டம் ஆரம்பமானது.சுற்றாடல் மற்றும் சமூக மாற்றமொன்றை ஏற்படுத்தி நாட்டின் தரப்படுத்தல் நோக்கங்களை முதன்மையாக கொண்டு "அழகான நாடு புன்னகைக்கும் மக்கள்"எனும் தொனிப்பொருளில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவால் "கிளீன் சிறீலங்கா" வேலைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இதன் தொடர்ச்சியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹதுல் நஜீமால் பாடசாலை அதிபர்களுக்கு நடத்தப்பட்ட கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டத்திற்கமைவாக பாடசாலை மட்டத்திலான இவ் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் வகையில் கல்லூரி முதல்வர் ஏ. பி. நஸ்மியா சனூஸ் தலைமையில் உத்தியோகபூர்வ அங்குரார்ப்பண நிகழ்வு கல்லூரி ஸ்மார்ட் மண்டபத்தில் நடைபெற்றது. (எ)

## பெருவெள்ளம் பாய்வதால் கிட்டங்கி வீதி மூடப்பட்டது



கல்முனை,ஜன.21

கல்முனை மாநகரையும் நாவிதன்வெளி பெரு நிலப்பரப்பையும் இணைக்கும் கிட்டங்கி தாம்போதிக்கு மேலாக வெள்ளம் பாய்வதால் நேற்றுத் திங்கட்கிழமை போக்குவரத்து தடை செய்யப்பட்டது.

கடந்த இரண்டு நாட்களாக கிட்டங்கி தாம்போதியில் வெள் ளம் பெரும் வெள்ளம் பாய்கிறது.

கல்முனை சேனைக்குடியிருப்பு , நாவிதன்வெளி, சவளக்கடை பிரதேசங்களை தரை வழியாக இணைக்கின்ற கிட்டங்கி பாலமானது அதிகரித்த ஆற்றின் நீர்மட்டம் காரணமாக நேற்றுத் திங்கட்கிழமை காலை இராணுவத்தினர் மற்றும் பொலி ஸாரால் மூடப்பட்டது.

இதனால், அவ்வழியே பயணம் செய்கின்ற அரச மற்றும் தனியார் அதிகாரிகள், மாணவர்கள் தமது அன்றாட கடமைகளை நிறைவேற்றுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

சீரற்ற காலநிலை காரணமாக கிழக்கு மாகாணத்தில் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பல வீதிகளின் குறுக்காக வெள்ளம் பாய்கிறது. கிட்டங்கி பாலத்தை ஊடறுத்து நீர் பாய்வதால் போக்குவரத்துக்கு பாதுகாப்பற்றதாக இந்த வீதி காணப்படுவதால். பொலிஸாரால் இந்த வீதி மூடப்பட்டு போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலால் சிறை பிடிக்கப்பட்ட 90 பலஸ்தீனர்கள் விடுதலை!

## போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலானது காஸாவில் மக்கள் கொண்டாட்டம்

காஸா முனை, ஜன.21

**இஸ்ரேல் - ஹமாஸ் இடையே ஏற்படுத்தப்பட்டுள்ள போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி முதற்கட்டமாக இஸ்ரேலால் சிறை பிடிக்கப்பட்ட 90 பலஸ்தீனர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.**



இரு தரப்பு இடையே ஓராண்டுக்கு மேல் போர் நீடித்து வந்தது. இந்தப் போரை நிறுத்த அமெரிக்கா, கட்டார், எகிப்து போன்ற நாடுகள் மத்தியஸ்தம் செய்தன. இதன் அடிப்படையில், காஸா முனையில் தங்கள் வசம் உள்ள இஸ்ரேலிய பணயக் கைதிகளை விடுதலை செய்ய ஹமாஸ் ஒப்புக் கொண்டது. அதேபோன்று, காஸாவில் தாக்குதலை நிறுத்தவும் இஸ்ரேல் ஒப்புக்கொண்டது.

போர் நிறுத்தம் மொத்தம் 3 கட்டங்களை கொண்டது. போர் நிறுத்தத்தின் முதற்கட்டமாக 6 வாரங்களில் (42 நாட்கள்) 33 பணயக் கைதிகளை விடுதலை செய்ய ஹமாஸ் ஒப்புக்கொண்டது. 33 பணயக் கைதிகளுக்கு ஈடாக தங்கள் நாட்டு சிறைகளில் உள்ள பலஸ்தீனியர்கள் 1,904 பேரை இஸ்ரேல் விடுதலை செய்கிறது.

போர் நிறுத்தத்தின் முதல் நாளில் இஸ்ரேலிய பணய கைதிகளில் 3 பேரை ஹமாஸ் விடுதலை செய்ய வேண்டும். அதற்கு ஈடாக இஸ்ரேல் சிறையில் உள்ள பலஸ்தீனியர்கள் 90 பேர் விடுதலை செய்யப்பட வேண்டும். அதே வேளை, ஒப்பந்தப்படி இரு தரப்பும் விடுதலை செய்யப்பட உள்ள நபர்களின் பெயர் விவரங்களை 24 மணி நேரத்துக்கு முன்னதாகவே தெரிவிக்க வேண்டும்.

இதன்படி, இஸ்ரேல் விடுதலை செய்யவுள்ள 90 பலஸ்தீனியர்களின் பெயர் விவரத்தை வெளியிட்டது. ஆனால், ஹமாஸ் விடுதலை செய்ய வேண்டிய இஸ்ரேலிய பணயக் கைதிகளின் விவரங்கள் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணி வரை வெளியாகவில்லை. இதனால், போர் நிறுத்தம் அமுலுக்கு வராமல் இருந்தது. இதையடுத்து, காஸா முனையில் இஸ்ரேல் அதிரடி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் 108 பேர் உயிரிழந்தனர்.

இதனிடையே கடும் இழுபறிக்கு பிறகு, 3 பெண் பணயக்கைதிகளின் பெயர் விவரங்களை இஸ்ரேலிடம் ஹமாஸ் அமைப்பு வழங்கியது.

இதன் மூலம் 15 மாதங்களுக்கு பிறகு காஸாவில் அமைதி திரும்பியுள்ளது.

போர் நிறுத்தம் அமுலுக்கு வந்ததை காஸா மக்கள் வீதிகளில் இறங்கி கொண்டாடினார். இளைஞர்கள் பலஸ்தீன கொடிகளை கைகளில் ஏந்தியபடி ஊர்வலமாக சென்று தங்களின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

அதேவேளையில் ஹமாஸ் அமைப்பை சேர்ந்த வர்கள் கைகளில் துப்பாக்கி களுடன் கார்களில் அணிவ குந்து போர் நிறுத்தத்தை கொண்டாடினர்.

முன்னதாக போர் காரணமாக வீடுகளை விட்டுவிட்டு பாதுகாப்பு தேடி இடம் பெயர்ந்த பலஸ்தீன மக்கள் நேற்று முன்தினம் காலை முதலே தங்களின் வீடுகளுக்குத் திரும்பத் தொடங்கினர்.

இதனி டையே இஸ்ரேலின் இடை விடாத தாக்குதல்கள் காரண மாக நீண்ட காலமாக எகிப்து எல்லையில் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த நிவாரண பொருட் களுடன் கூடிய லொறிகள் காஸாவுக்குள் நுழையத் தொடங் கின.

இந்த போர் நிறுத்த ஒப்பந்தம் நம்பிக்கை அளித்துள்ள நிலையில், ஆரம்ப ஆறு வார காலத்துக்குப் பிறகு சண்டை மீண்டும் தொடங்குமா என்பது குறித்து கவலைகள் நீடித்து வருகின்றன. (எ)

# சூடானில் உள்நாட்டு கலவரம் இருளில் மூழ்கிய தலைநகரம்


கார்டூம், ஜன.21

சூடானில் உள்நாட்டு கலவரம் தீவிரமடைந்துள்ளது. இதனால், தலைநகரம் இருளில் மூழ்கியது.

சூடானில் இராணுவ ஆட்சி நடைபெறுகிறது. இதனை எதிர்த்து துணை இராணுவத்தினர் போராடி வருகின்றனர். இதனால் இருதரப்புக்கும் இடையே மோதல் போக்கு ஏற்பட்டு உள்நாட்டு கலவரமாக வெடித்துள்ளது. இதில் அப்பாவி பொதுமக்கள் ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர். இந்த நிலையில் கடந்த 16ஆம் திகதி தலைநகர் கார்டூம் அருகே மியாரோ நீர்மின் நிலையம் மீது துணை இராணுவப் படையினர் ட்ரோன்கள் மூலம் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் பலர் உயிரிழந்தனர். மேலும் அந்த நீர்மின் நிலையம் கடும் சேதத்துக்குள்ளானது. குறிப்பாக நீர்மின் நிலையத்தின் மின்சார சேமிப்பு கலன்கள் வெடித்து சிதறின. இதனால், அங்கு மின்சாரம் உற்பத்தி பணி பாதிப்புக்குள்ளாகி மின்தடை ஏற்பட்டது. இதன் காரணமாக தலை நகரில் உள்ள வீடுகள், கல்வி நிலையங்கள், அரசு அலு வல கங்கள் ஆகியவை கடந்த 4 நாட்களாக இருளில் மூழ்கின. (எ)

# எரிபொருள் பௌசர் வெடித்து சிதறியதில் 70 பேர் உயிரிழப்பு



அபுஜா, ஜன.21

நைஜீரியாவில் எரிபொருள் பௌசர் வெடித்து சிதறியதில் 70 பேர் உயிரிழந்தனர்.

நைஜீரியாவின் தலைநகர் அபுஜாவையும் வடக்கு நகரமான கடுனா நகருடன் இணைக்கும் சந்தியில் 60, 000 லீற்றர் பெற்றோலுடன் சென்ற பௌசர் திடீரென தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. இந்தக் கொள்கலன் வாகனம் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதை அறிந்த அப்பகுதி மக்கள், பெற்றோலுக்காக முண்டியடித்துச் சென்றனர். இதன் போது, குறித்த பௌசர் வெடித்து சிதறியது.

பெற் றோலை சேகரிப்பதற்காகக் கூடியிருந்த 70இற்கும் மேற் பட்டோர் பலியாகினர். இந்த விபத்தில், பலரும் அடையாளம் காணமுடியாத அளவுக்கு தீயில் கருகியதாகவும், பலரும் காயமடைந்தாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ)

# நல்லிணக்கம், ஒற்றுமையை வளர்க்கும் மாக கும்பமேளா

## பிரதமர் மோடி பெருமிதம்

புதுடில்லி, ஜன.21

இந்தியாவின் வடமாநிலங்களில் நடைபெறும் கும்ப மேளா, தென் மாநிலங்களில் நடைபெறும் புஷ்கரம் ஆகிய நிகழ்வுகள் சகோதரத்துவம், நல்லிணக்கம், ஒற்றுமையை வளர்க்கின்றன என்று பிரதமர் நரேந்திர மோடி பெருமிதத்துடன் தெரிவித்தார்.

மாதம்தோறும் 'மனதின் குரல்' வானொலி நிகழ்ச்சி வாயிலாக நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி உரையாற்றி வருகிறார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் உரையாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார். (எ)



இந்தியாவின் உத்தர பிரதேசத்தின் பிரயாக் ராஜில் மகா கும்ப மேளா நடைபெற்று வருகிறது. இதையொட்டி, திரிவேணி சங்கமத்தில் இதுவரை 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெளிநாட்டினர் புனித நீராடினர்.

# கெஜ்ரிவால் தொகுதியில் அதிகளவு வேட்பாளர்கள்

புதுடில்லி,ஜன.21

ஆம் ஆத்மி கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் போட்டியிடும் புதுடில்லி தொகுதியில் அதிக எண்ணிக்கையில் வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர்.

டில்லி சட்டப்பேரவைக்கு ஒரே கட்டமாக பெப்ரவரி 5ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளது. வாக்கு எண்ணிக்கை பெப்ரவரி 8இல் நடைபெறுகிறது. டில்லியில் உள்ள 70 சட்டப்பேரவை தொகுதிகளில் போட்டியிட மொத்தம் 981 பேர் மனுத் தாக்கல் செய்தனர். (எ)

# அமெ. ஜனாதிபதி ட்ரம்புடன் முகேஷ் அம்பானி சந்திப்பு



வாஷிங்டன், ஜன.21

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன் முகேஷ் அம்பானி, நீடா அம்பானி ஆகியோர் சந்தித்து கலந்துரையாடினர்.

அமெரிக்காவின் 47ஆவது ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்றுள்ளார். ட்ரம்ப் பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ள உலகத் தலைவர்கள் பலருக்கும், பல்வேறு துறைகளைச் சேர்ந்த பிரபலங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது.

அந்த வகையில் இந்தியாவின் பிரபல தொழிலதிபரும், பெரும் கோடீஸ்வரருமான முகேஷ் அம்பானி மற்றும் அவரது மனைவி நீடா அம்பானி ஆகிய இருவரும் ட்ரம்ப் பதவியேற்பு விழாவில் பங்கேற்றனர்.

இந்த நிலையில், பதவியேற்பு விழாவுக்கு முன்பாக துணை ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ஜே.டி. வான்ஸ் வாஷிங்டன் டிசியில் அளித்த இரவு விருந்தில் முகேஷ் அம்பானியும், நீடா அம்பானியும் பங்கேற்றனர். அப்போது டொனால்ட் ட்ரம்பை முகேஷ் அம்பானி, நீடா அம்பானி ஆகியோர் சந்தித்து பேசினர். இந்தச் சந்திப்பின்போது ட்ரம்புக்கு இருவரும் வாழ்த்து தெரிவித் தனர். மேலும் இந்திய - அமெ ரிக்க உறவு இன்னும் ஆழமாக அமையும் என்ற நம்பிக்கை இருப் பதாக அம்பானி தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நைஜீரியா அசத்தல் வெற்றி!

## அதிர்ச்சி தோல்வியடைந்தது நியூசிலாந்து


சரவாக், ஜன.21

இறுதி வரை போராடிய நைஜீரியா 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது.

2ஆவது ஜூனியர் மகளிர் ரி - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் (19 வயதுக்குட்பட்டோர்) மலேசியாவில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற ஒரு லீக் ஆட்டத்தில் நியூசிலாந்து - நைஜீரியா அணிகள் மோதின. மைதானம் ஈரப்பதமாக இருந்ததால் இந்த ஆட்டம் 13 ஓவர்களாக குறைக்கப்பட்டது.

இந்த ஆட்டத்துக்கான நாணயச்சுழற்சியில் வென்ற நியூசிலாந்து பந்துவீசுவதாக அறிவித்தது. இதையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய நைஜீரியா 13 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழந்து 65 ஓட்டங்கள் எடுத்தது. நைஜீரியா தரப்பில் அதிகபட்சமாக வில்லியன் உதே 19 ஓட்டங்கள் எடுத்தார்.

தொடர்ந்து 66 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நியூசிலாந்து அணி 13 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழந்து 63 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் நியூசிலாந்துக்கு அதிர்ச்சி கொடுத்த நைஜீரியா 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில்



அசத்தல் வெற்றி பெற்றது.

நியூசிலாந்து தரப்பில் அதிகபட்சமாக அனிகா டாட் 19 ஓட்டங்கள் எடுத்தார். நைஜீரியா தரப்பில் யூசன் அமைதி, அடேஷோலா அடேகுன்லே, அதிர்ஷ்ட பக்தி ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். (எ)

# டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டியலில் மாற்றம்

முல்தான், ஜன.21


டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டியலில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தான் - மேற்கு இந்திய தீவுகள் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி முல்தானில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் முதல் இன்னிங்ஸில் முறையே பாகிஸ்தான் 230 ஓட்டங்களும், மேற்கு இந்திய தீவுகள் 137 ஓட்டங்களும் அடித்தன.

பின்னர் 93 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய பாகிஸ்தான் 157 ஓட்டங்களில் சுருண்டது. இதன் மூலம் மேற்கு இந்திய தீவுகளுக்கு 251 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. தொடர்ந்து 251 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய மேற்கு இந்திய தீவுகள் அணி தனது 2ஆவது இன்னிங்ஸில் 123 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. இதன் மூலம் பாகிஸ்தான் 127 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியை அடுத்து ஐ.சி.சி டெஸ்ட் சம்பியன்ஷிப்பின் புதிய தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது. இதன்படி இந்த பட்டியலில் தென்னாபிரிக்கா (69.44 சதவீதம்) முதல் இடத்திலும், அவுஸ்திரேலியா (63.73 சதவீதம்) 2ஆம் இடத்திலும், இந்தியா (50.00 சதவீதம்)3ஆம் இடத்திலும், நியூசிலாந்து (48.21 சதவீதம்) 4 ஆம் இடத்திலும், இலங்கை (45.45 சதவீதம்) 5ஆம் இடத்திலும் உள்ளன.

மேலும், இங்கிலாந்து (43.18 சதவீதம்) 6ஆவது இடத்திலும், பங்களாதேஷ் (31.25 சதவீதம்) 7ஆவது இடத்திலும் உள்ளன. மேற்கு இந்திய தீவுகளுக்கு எதிராக வெற்றி பெற்ற பாகிஸ்தான் தனது வெற்றி சதவீதத்தை அதிகரித்து (30.13 சதவீதம்) 8ஆவது இடத்தில் தொடர்கிறது. தோல்வி கண்ட மேற்கு இந்திய தீவுகள் அணியின் வெற்றி சதவீதம் குறைந்ததன் காரணமாக அந்த அணி (22.22 சதவீதம்) 9ஆவது இடத்தில் உள்ளது. (எ)



# ஸ்விடோலினா வெற்றி

மெல்பேர்ன்,ஜன.21

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் ஸ்விடோலினா காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடர் மெல்பேர்னில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவின் 4ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் உக்ரைனின் ஸ்விடோலினா, ரஷ்யாவின் குடெர்மெடோவாவுடன் மோதினார்.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஸ்விடோலினா 6-4 மற்றும் 6-1 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.(எ)



# காலிறுதிக்கு முன்னேறிய அமெரிக்காவின் கோகோ



மெல்பேர்ன், ஜன.21

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் அமெரிக்காவின் கோகோ காப் காலிறுதிக்கு முன்னேறினார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவின் 4ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் கோகோ காப் - சுவிட்சர்லாந்தின் பெலிண்டா பென்சிக்குடன் மோதினார்.

இந்தப் போட்டியில் முதல் செட்டை 5-7 என்ற புள்ளிக்கணக்கில் இழந்த கோகோ காப், அடுத்த இரு செட்களை 6-2, 6-1 என்ற புள்ளிக்கணக்கில் கைப்பற்றி அசத்தினார். இதன் காரணமாக 5-7, 6-2, 6-1 என்ற புள்ளிக்கணக்கில் பெலிண்டா பென்சிக்கை வீழ்த்தி கோகோ காப் காலிறுதிக்கு முன்னேறினார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் இன்று 21ஆம் திகதி நடைபெறும் காலிறுதி ஆட்டம் ஒன்றில் அமெரிக்காவின் கோகோ காப் - ஸ்பெயினின் பாலா படோசாவுடன் மோதவுள்ளார். (எ)

# ஆஸி ஓபன் ரென்னிஸில் கீஸ் காலிறுதிக்கு தகுதி

மெல்பேர்ன், ஜன.21

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் ரைபகினாவை வீழ்த்தி மேடிசன் கீஸ் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

ஆண்டின் முதல் "கிராண்ட்ஸ்லாம்" போட்டியான இந்த ரென்னிஸ் தொடர் மெல்பேர்னில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவின் காலிறுதி ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனைகளான மேடிசன் கீஸ் (அமெரிக்கா) - ரைபகினா (கஜகஸ்தான்) பலப்பரீட்சை நடத்தினர்.

சமபலம் வாய்ந்த இரு வீராங்கனைகளும் மல்லுக்கட்டியதால் ஆட்டத்தில் அனல் பறந்தது. இதில் முதல் செட்டை கீஸ் கைப்பற்றிய நிலையில், 2ஆவது செட்டை ரைபகினா கைப்பற்றினார். இதனால் 3ஆவது செட் பரபரப்புக்குள்ளானது. அந்த செட்டை கீஸ் கைப்பற்றி பரபரப்புக்கு முற்றுப்புள்ளி வைத்தார். இந்த ஆட்டத்தில் மேடிசன் கீஸ் 6-3, 1-6 மற்றும் 6-3 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார். (எ)



# ஷகிப் அல் ஹசனை கைது செய்ய உத்தரவு



டாக்கா, ஜன.21

ஷகிப் அல் ஹசனை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் முன்னணி வீரரும், முன்னாள் தலைவருமான ஷகிப் அல் ஹசன் மீது கடந்த டிசெம்பர் 15ஆம் திகதி காசோலை மோசடி வழக்கில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இந்த வழக்கில் அவரை நேற்று முன்தினம் 19 ஆம் திகதிக்குள் ஆஜராகும் படி டாக்கா நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஆனால் ஷகிப் அல் ஹசன் ஆஜராகவில்லை. இதனையடுத்து அவரை கைது செய்ய நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. பங்களாதேஷில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்துக்குப் பின் அவர் சொந்த நாட்டுக்குத் திரும்பவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# ஜோகோவிச் அபாரம்

மெல்பேர்ன், ஜன.21

ஆஸி ஓபன் ரென்னிஸ் தொடரில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜோகோவிச் வெற்றி பெற்றார்.

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் போட்டி மெல்பேர்ன் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 4ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீரரான நோவக் ஜோகோவிச் (செர்பியா) - செக் குடியரசின் ஜிரி லெஹக்காவுடன் மோதினார்.

இந்த போட்டியில் தொடக்கம் முதலே அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஆதிக்கம் செலுத்திய ஜோகோவிச் 6-3, 6-4, 7-6 (7-4) என்ற செட் கணக்கில் ஜிரி லெஹக்காவை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

இன்று 21ஆம் திகதி நடைபெறும் காலிறுதி ஆட்டம் ஒன்றில் ஜோகோவிச், ஸ்பெயினின் கார்லஸ் அல்காரஸுடன் மோதவுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 108 கிலோ...

விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றில் பரப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## ரணில்...

இதற்கிடையில், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளை எதிர்வரும் தேர்தல்களில் ஒன்றிணைப்பது தொடர்பான முதல் கலந்துரையாடல் கொழும்பில் நடைபெறும் என்பதை அதன் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார உறுதிப்படுத்தினார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன, இந்தக் கலந்துரையாடலில் ஐ.தே.க சார்பில் பங்கேற்க உள்ளார். (அ)

## எரிபொருள்...

கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கனிய வளக் கூட்டுத்தாபனம் 3 பில்லியன் டொலர் கடனில் இயங்குகிறது.

அந்த கடன் அனைத்தையும் திறைசேரி பொறுப்பேற்றுள்ளது.

விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு லீற்றர் எரிபொருளுக்கும் கடனைச் செலுத்துவதற்கான கட்டணம் அறவிடப்படுகிறது.

கடன் செலுத்தி நிறைவுறுத்தப்பட்டவுடனேயே எரிபொருள் மீது விதிக்கப்பட்டுள்ள வரியைக் குறைக்க முடியும் - என்றார். (அ)

## ஊழல்...

இறுதியிலும் பெப்ரவரியிலும் வழக்குகளை தாக்கல் செய்யும் என ஜனாதிபதி அனுரகுமார திஸாசாநாயக்க தெரிவித்திருப்பது மகிழ்ச்சியான செய்தியாகும் .

இலஞ்ச ஆணைக்குழுவுக்கு (அதன் சட்ட அதிகாரங்களை வலுப்படுத்துதல் உட்பட), சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களத்தில் உள்ள குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அதிக ஆதாரங்களை வழங்குவதன் மூலம் தேக்கநிலையை நீக்க வேண்டும்.

மேலும் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கையை நிறைவேற்றுவதற்கு அதிக ஆதாரங்களை வழங்க வேண்டும்.

அதேவேளை, ஊழல் தொடர்பான வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்களை நிறுவுவதையும் ஜனாதிபதி பரிசீலிக்க வேண்டும், இதனால் வழக்குகள் தினசரி அடிப்படையில் விசாரிக்கப்பட்டு முடிவுகளை நோக்கிச் செல்லும் - என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## உத்தியோக...

போதே நாமல் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அரசாங்கத்தின் கடப்பாடாகவுள்ளது. ஏனெனில் அரசியலமைப்புக்கு அமைய இந்த வரப்பிரசாதம் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்புக்கு அமைய முன்னாள் ஜனாதிபதிகளுக்கான வரப்பிரசாதமாகவே குறித்த உத்தி யோகபூர்வ இல்லம் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் தற்போதைய ஜனாதிபதிக்கு அதனை வேறு தரப்பினருக்கு விற்க வேண்டுமாயின் அங்கிருந்து செல்ல நாம் தயாராகவே உள்ளோம். முன்னாள் ஜனாதிபதி மகிந்த இந்த வீட்டில் தங்கத் தயாராக இல்லை. நாம் எப்போது வேண்டுமானாலும் செல்லத் தயாராக இருக்கிறோம்.

முன்னாள் ஜனாதிபதிகள் உத்தியோகபூர்வ இல்லத்தை கேட்டு வாங்கிக் கொள்ளவில்லை. மாறாக அந்த விடயம் அரசியலமைப்பின் ஊடாக அவர்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள உரிமையாகும் - என்றார். (அ)

# ஓடும் ரயிலில் தீ!

கொழும்பு, ஜன. 21

பெலியத்தையில் இருந்து கண்டி நோக்கிச் சென்ற எக்ஸ்பிரஸ் ரயிலின் இயந்திரம் திடீரென தீப்பிடித்து விபத்து ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை மாலை எந்தேரமுல்ல ரயில் நிலையத்துக்கு அருகில் இடம்பெற்றது.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக ரயில் இயந்திரம் தீப்பிடித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எரிந்த ரயிலின் இயந்திரம் மாற்றப்பட்டு சம்பந்தப்பட்ட ரயிலை இயக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக ரயில்வே துறை அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

இதனால், பிரதான பாதையில் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## விசுவமடு...

நடவடிக்கை ஒன்றை முன்னெடுத்தனர்.

அதன் தொடர்ச்சியாக சேகரிக்கப்பட்ட சுமார் 2 ஆயிரத்து 500 பேரின் கையெழுத்துக்கள் அடங்கிய மகஜரை அரசாங்கத்துக்கு கையளித்து காணியை விடுவிக்க கோரும் முகமாகவும் சந்திப்பை மேற்கொண்டனர்.

இச்சந்திப்பு, யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன் போது ஜனாதிபதி மற்றும் பிரதமர் மற்றும் ஆளுநர் ஆகியோருக்கான மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

## அரிசி...

சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

எதிர்வரும் வரவு - செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட பல தரப்பினருக்கு நிவாரணம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் இதன்போது கூறினார்.

தேசிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட ஹொரணை தேர்தல் தொகுதியின் கட்சிக் கூட்டம் ஹொரணை பொகுனுவிட்டவில் உள்ள ஜனசேத விளையாட்டரங்கில் நடைபெற்றது. ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸவும் கலந்து கொண்டார்.

ஜனாதிபதி இங்கு மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் எவ்வளவு காலம் செயற்படும்? 5 வருடங்களுக்கு அப்படியானால் நாம் செல்லவேண்டிய தூரம் அதிகம். பொதுவாக நம் நாட்டில் அரசியலில் தோற்ற பிறகு அந்தக் குழுக்கள் கொஞ்சம் கூச்சலிடுவார்கள்.ஆனால் அது கொஞ்ச காலத்திற்கு தான். இப்போதும் கூட அரசாங்கம் நிலையாக இருப்பதற்கு முன்பு அதை சீர்குலைக்க முடியுமா? என்று கூச்சலிடுகிறார்கள்.

நாங்கள் அவர்களுக்கு கூற விரும்புகிறோம் கனவு காண அனைவருக்கும் உரிமை உண்டு. ஆனால் அது கனவாகவே இருக்கும்.அரிசி பிரச்னை உள்ளது. ஏற்றுக்கொள்கிறோம். தட்டுப்பாடு ஏற்பட்டது. தரவுகள் இன்மையே அதற்கு காரணம். நாட்டில் எவ்வளவு அரிசி உற்பத்தி செய்யப்படுகிறது. எவ்வளவு நுகரப்படுகிறது. எவ்வளவு பற்றாக்குறை ஏற்படுகிறது என்பது தொடர்பில் தரவுகள் இல்லை.நான் உறுதியளிக்கிறேன். நாட்டில் இனி ஒருபோதும் அரிசி தட்டுப்பாடு ஏற்படாது.

இந்த பெரும்போகத்தில் நெல் இருப்பது தனியாரிடம் மாத்திரமல்ல அரசிடமும் நெல் தொகையை வைத்திருப்பதற்கான வேலைத்திட்டத்தை நாம் மேற்கொண்டுள்ளோம். நிர்ணய விலையை விட ஒரு ரூபா அதிகரித்தும் அரிசியை விற்பனை செய்ய இனி இடமளிக்கமாட்டோம் - என்றார். (அ)

# பிரமிட் திட்ட மோசடி நிறுவனங்களின் பெயர்களை வெளியிட்ட மத்திய வங்கி

கொழும்பு, ஜன. 21


தடை செய்யப்பட்ட பிரமிட் திட்டங்களில் ஈடுபட்டுள்ள நிறுவனங் களின் பெயர் விவரங்களை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 21 நிறுவனங்கள், திருத்தப்பட்டவாறான 1998ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டத்தின் 83 (இ) பிரிவின் கீழ் தடைசெய்யப்பட்ட திட்டமொன்றில் ஈடுபட்டுள்ளன என்பதை இலங்கை மத்திய வங்கி கண்டறிந்துள்ளது.

இதேவேளை வங்கித்தொழில் சட்டத்தின் 83 (இ) பிரிவின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் தீர்மா னிக்கப்பட்டுள்ள நிறுவனமொன்றின் பெயரை வெளிப்படுத்தலானது அந்த நிறுவனம் தொடர்பாக வழங்கப்பட் டுள்ள நீதிமன்ற கட்டளையொன்றின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ)

# 20 நாட்களில் மூவாயிரத்துக்கும் அதிகமான டெங்கு நோயாளிகள்!



கொழும்பு, ஜன. 21

வருடம் ஆரம்பித்து 20 நாட்களில் 3,185 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, மேல் மாகாணத்தில் 1,442 நோயாளர்களும் தென் மாகாணத்தில் 374 நோயாளர்களும் கிழக்கு மாகாணத்தில் 312 நோயாளர்களும் மத்திய மாகாணத்தில் 281 நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

குறிப்பாக மேல் மாகாணத்திலேயே அதிகளவான நோயாளர்கள் பதிவாதியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் குறித்த காலகட்டத்தில் இருவர் டெங்கு நோயால் உயிரிழந்துள்ளதாக பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், கடந்த ஆண்டு நாட்டில் 49,887 டெங்கு நோயாளர்களும் 24 டெங்கு இறப்பு களும் பதிவாகியுள்ளன.

# அகில இலங்கை ரீதியிலான பூப்பந்து போட்டி வவுனியாவில்

வவுனியா,ஜன.21

அகில இலங்கை ரீதியிலான பூப்பந்து போட்டி வவுனியா, ஓமந்தை உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

வடமாகாண பூப்பந்தாட்ட சங்கத்தின் ஒழுங்கமைப்பில் கடந்த18ஆம் திகதி ஆரம்பமாக இந்தப் போட்டிகள் இன்று 21ஆம் திகதி வரை நடைபெறுகின்றன. இன்று மதியம் இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது.

குறித்த போட்டிகள் கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட பிரிவின் கீழ் நடைபெறுவதுடன், இப்போட்டியில் நாடளாவிய ரீதியிலிருந்து 575 ஆண், பெண் போட்டியாளர்கள் பங்குபற்றியுள்ளனர். (எ-10)

## ராஜபக்ஷர்களின்...

தண்டனையை அனுபவித்தே தீர வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் ஊழல், மோசடிகளுக்கு இடமேயில்லை. ஊழல், மோசடிகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதே எமது அரசின் பிரதான நோக்கம் - என்றார். (அ)

## இந்தியாவில்...



யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்துக்கு எடுத்து வரப்பட்டது.

மாவை கந்தன் ஆலயத்தில் விசேட மஹாயாகம் இடம்பெற்று சில வாரங்கள் மாவை கந்தன் ஆலயத்தில் தங்கி இருந்து பின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரசித்தி பெற்ற முருகன் ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து உகந்தை முருகன் ஆலயத்திலும் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற உள்ளன.


கொழும்பு தலைநகருக்கு முருகப் பெருமான் எடுத்து செல்லப்பட்டு, கொழும்பிலிருந்து கதிர்காமம் வரையிலான முருகன் ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகளை தொடர்ந்து எதிர்வரும் மார்ச் மாதம் கதிர்காமத்தில் சுப்பிரமணியன் சமேதராக பிரதிஷ்டை செய்யப்பட உள்ளார்.

குறித்த நிகழ்வுகள் கதிர்காம ஆலய நிர்வாக உறுப்பினரும் முன்னாள் வடமாகாண ஆளுநருமான ஜீவன் தியாக ராஜா தலைமையில் நடைபெற்றது. (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# கல் ஓயா கரை இடிந்தமையால் நீரில் மூழ்கிய வயல் நிலங்கள்!



கொழும்பு, ஜன. 21

கல் ஓயாவின் கரைகள் இடிந்து விழுந்ததன் காரணமாக அப்பகுதியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக கல் ஓயாவை அண்மித்துள்ள பகுதியில் உள்ள சுமார் 600 ஏக்கர் நெற்பயிர் செய்கை நீரில் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவற்றில் பல வயல்களில் பயிர்கள் அறுவடை செய்யப்பட்டு விட்டதாகவும், அறுவடைக்கு அருகில் உள்ள பல வயல்களும் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் கல் ஓயாவின் கரைகள் அழிக்கப்பட்டு, அந்த நிலத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டதால் இந்த துயரத்தை எதிர்கொள்ள நேரிட்டதாக கிராம மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

கடந்த வருடத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக கல் ஓயா ஆற்றின் கரைகள் உடைந்தன. பின்னர் பழுதுபார்க்கப்பட்ட அணைக்கட்டு 2024 ஆம் ஆண்டு வெள்ளத்தில் மீண்டும் உடைந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று பிற்பகல் வெடிப்புச் சம்பவம்!

## மூன்று பேர் காயம்



கொழும்பு, ஜன. 21


**கட்டுநாயக்க விமான நிலைய முனையத்தில் நேற்று திங்கட் கிழமை பிற்பகல் இடம்பெற்ற வெடிப்பு சம்பவத்தில் மூன்று பேர் காயமடைந்துள்ளதாக விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.**

விமான நிலையத்தில் விலங்குகள் மற்றும் பறவைகளினால் ஏற்படும் ஆபத்துக்களைக் கட்டுப்படுத்தும் கட்டுப்பாட்டுப் பிரிவினர் கட்டுநாயக்க விமான நிலைய முனையத்துக்கு அருகில் கூட்டம் கூட்டமாகப் பறந்து திரிந்த பறவைக் கூட்டத்தை விரட்டுவதற்காக வானத்தை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

எதிர்பாராத விதமாகக் குறித்த துப்பாக்கிச் சூடு விமான நிலைய விலங்குகள் மற்றும் பறவைகளின் ஆபத்துக் கட்டுப்பாட்டுப் பிரிவினர் பயணித்த பிக்கப் வாகனத்தின் மீது விழுந்து வெடித்துள்ளது.

இதனால் பிக்கப் வாகனத்திலிருந்த ஏனைய வெடிபொருட்களும் வெடித்துச் சிதறியுள்ளன.

இதன்போது கப் வாகனத்திலிருந்த மூன்று அதிகாரிகள் காயமடைந்துள்ள நிலையில் சிகிச்சைக்காக நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)



# சாரதிக்கு மயக்க மருந்தை கலந்த பானம் கொடுத்து நகை கொள்ளை

## யாழ்ப்பாண நகரப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 21

வாகனச் சாரதிக்கு மயக்க மருந்து கொடுத்து, சாரதியின் 05 பவுண் நகைகளை இருவர் கொள்ளையடித்துச் சென்ற சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

யாழ். நகர் பகுதியில் வாடகை முறையில் இயங்கும் கன்ரர் ரக வாகனத்தின் சாரதி ஒருவரின் நகைகளே நேற்று முன்தினம் கொள்ளையடிக்கப் பட்டன.

வாகன வாடகை தரிப்பிடத்துக்குச் சென்ற இருவர், கிளிநொச்சி பகுதியிலிருந்து பொருட்களை ஏற்றிவர வேண்டுமெனக் கூறி, வாகனத்தை வாடகைக்கு அமர்த்தி அவ்வாகனத்தில் இருவரும் கிளிநொச்சி நோக்கிப் பயணித்துள்ளனர்.

பரந்தன் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது வீதியோரமாக வாகனத்தை நிறுத்துமாறு இருவரும் சாரதியிடம் கூறியுள்ளனர்.

வாகனம் நிறுத்தப்பட்ட பின்னர் அப்பகுதியில் உள்ள கடையொன்றில் இருவரும் குளிர்பானம் வாங்கி, சாரதிக்கு குடிப்பதற்கு வழங்கியுள்ளனர்.

குளிர்பானத்தை குடித்த சாரதி சிறிது நேரத்தில் மயக்கமடைந்துள்ளார்.

வீதியோரத்தில் நீண்ட நேரமாக நிறுத்தி வைக்கப்பட்ட வாகனத்தில் சாரதி அசைவின்றி மயக்க நிலையில் இருந்ததை அவதானித்த சிலர், சாரதியை உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள் ளனர்.

கிளிநொச்சி வைத்திய சாலையில் சிகிச்சை அளிக்கப்பட்ட சாரதி சுயநினைவுக்கு வந்த பின்னரே, தனது நகைகள் கொள்ளையடிக்கப்பட்டதை அறிந்து பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார். (அ)


## விண்ணக வாழ்வில் ஆண்டுகள் ஈரெட்டு

மலர்வு
10.08.1932



உதிர்வு
21.01.2009

**திருமதி**
**மரியதாசம்மா பீற்றர் திசநாயகம்**
**( இளைப்பாறிய ஆசிரியை )**

“உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்”

அன்புடனும் பண்புடனும்
அகிலமதில் வாழ வழியமைத்து
இன்பத்திலும் துன்பத்திலும்
அரணாக நின்ற அன்னையே!
நல் ஆசானாய், உடன்பிறப்பாய்
வழிகாட்டியாய் வாழ்ந்தீர்கள்.
காலஓட்டத்தில் எமைப் பிரிந்து
ஆண்டுகள் ஈரெட்டு கழிந்திற்று!
உங்கள் வழித்தடங்கள் என்றும்
எம்முடன் வாழும்.

உங்கள் ஆத்மா இறைசந்நிதியில் இளைப்பாற பிரார்த்திக்கின்றோம்.

**அன்பு மகள், மருமகன், சகோதரி,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,**
**உறவினர், நண்பர்கள்.**


# பிரதமர் தலைமையில் நடைபெற்ற சீனப் புத்தாண்டு கலாசார நிகழ்வு



கொழும்பு, ஜன. 21

சீன மக்கள் குடியரசின் புத்தாண்டு கொண்டாட்டத்துடன் இணைந்ததாக இலங்கையில் உள்ள சீனத் தூதரகம் மற்றும் சீன கலாசார மற்றும் சுற்றுலா அமைச்சு இணைந்து சீன புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வு கொழும்பில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு சினமன் லைப் ஹோட்டலில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமர சூரிய தலைமையில் நடைபெற்றது.

சீனப் புத்தாண்டை முன்னிட்டு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியை பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய விழா நிகழ்வில் முன்வைத்தார்.

புத்தாண்டு கொண்டாட்டத்துடன் இணைந்ததாக 34 பேர் கொண்ட தூதுக்குழுவும் இலங் கைக்கு வருகை தந்துள்ளது.

நேற்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை ‘சீன உணவு விழா’ மற்றும் ‘துறைமுக நகர சீன கலாசார இரவு’ நிகழ்ச்சிகளை நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

சீன கலாசார அம்சங்களால் அலங்கரிக்கப்பட்ட இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன, கைத்தொழில் அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி நிதி மற்றும் திட்டமிடல் பிரதிய மைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், இலங்கைக்கான சீனத் தூதுவர், பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி உட்பட இலங்கை யர்கள் மற்றும் சீனப் பிரஜைகள் அடங்கிய குழுவினர் கலந்து கொண்டனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் [illegible] வேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org